ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2320/35 - 2023 පෙබරවාරි මස 21 වැනි අඟහරුවාදා - 2023.02.21

*2320/35 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 3/2013* (iii)

### *1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்*

*1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் சொல்லப்பட்ட சட்டத்தின் 321 ஆம் பிரிவின்கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

நிமல் சிறிபால டி சில்வா,
துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2023*, பெப்புருவரி *08*.

**ஒழுங்குவிதிகள்**

*1. (1)* இவ்வொழுங்குவிதிகள் *2023* ஆம் ஆண்டின் *01* ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (கடல்சார் பாதுகாப்பை அதிகரிப்பதற்கான விசேட வழிமுறைகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*(2)* இவ்வொழுங்குவிதிகளின் நோக்கம், (இதனகத்துப்பின்னர் "சமவாயம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) *1974* ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயத்தின் அத்தியாயம் XI- 2 இற்கும், காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான வரைவாவணத்துக்கும், அத்தகைய வரைவாவணத்துக்குச் செய்யப்பட்ட ஏதேனும் அடுத்துப்பின்னரான திருத்தத்துக்கும், சர்வதேசக் கப்பல் மற்றும் துறைமுக வசதிப் பாதுகாப்பு (ஐஎஸ்பீஎஸ்) சட்டக்கோவைக்கும் பயன்கொடுப்பதாதல் வேண்டும்.

1A - G 38919 — 07 (2023/02)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## பாகம் I

### இவ்வொழுங்குவிதிகளின் ஏற்புடைமை

**2.** (1) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் உபஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துள்ளனவும் சர்வதேசக் கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ளனவுமான பின்வரும் வகையினவான கப்பல்கள்:-

(i) அதிவேகப் பயணிக் கலன்கள் உட்பட, பயணிக்கப்பல்கள்;

(ii) 500 முழு மொத்தத் தொன்னளவையும் அதற்கு மேற்பட்டதையும் கொண்ட அதிவேகக் கலன்களுட்பட்ட சரக்குக் கப்பல்கள்; அத்துடன்

(iii) நடமாடும் கரைகடந்த துளைத்தல் அலகுகள்;

(ஆ) சமவாயம் ஏற்புடையதாகின்ற வெளிநாட்டுக் கப்பல்கள் இலங்கை நீர்ப்பரப்புகளில் இருக்கையில் அவை; அத்துடன்

(இ) பந்திகள் (அ) மற்றும் (ஆ) வில் குறித்துரைக்கப்பட்ட கப்பல்களுக்குச் சேவையாற்றுகின்ற துறைமுக வசதிகள்.

(2) இவ்வொழுங்குவிதிகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாதலாகாது:-

(அ) போர்க்கப்பல்களுக்கும் படைக்கப்பல்களுக்கும்;

(ஆ) 500 முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான சரக்குக் கப்பல்களுக்கும்;

(இ) பொறிமுறை வழிவகைகள்மூலம் உந்தப்படாத கப்பல்களுக்கும்;

(ஈ) பழைமைவாய்ந்த கட்டமைப்பைக் கொண்ட மரக் கப்பல்களுக்கும்;

(உ) வியாபாரத்தில் ஈடுபடாத உல்லாசப்பயண உலாப்படகுகளுக்கும்;

(ஊ) மீன்பிடிக்கலன்களுக்கும்; அத்துடன்

(எ) வர்த்தகஞ்சார நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவனவும் அரசாங்கத்தினால் தொழிற்படுத்தப்படுவனவுமான கப்பல்களுக்கும்.

**3.** (1) வழமையாகச் சர்வதேசக் கடற்பயணங்களில் ஈடுபடாததும் ஆனால் விதிவிலக்கான சூழ்நிலைகளில் தனியொரு சர்வதேசக் கடற்பயணத்தைப் பொறுப்பேற்பதற்குத் தேவைப்படுத்தப்படுவதுமான கப்பலொன்று, (இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் இவ்வொழுங்குவிதிகளின் தேவைப்பாடுகள் எவற்றிலிருந்தும் விலக்களிக்கப்படலாம்; ஆயின், பணிப்பாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில் கப்பலினால் பொறுப்பேற்கப்படவுள்ள கடற்பயணத்துக்காகப் போதியதாகவுள்ள காப்புத் தேவைப்பாட்டுக்கு அது இணங்கியொழுகுதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்பு–

(அ) அது எழுத்திலிருந்தால்;

(ஆ) அது பயனுக்குவரும் தேதியைக் குறித்துரைத்தால்; அத்துடன்

(இ) ஒரு விலக்களிப்பின் விடயத்தில், அது எந்த நியதிகளின்மீது வழங்கப்படுகின்றதோ அந்த நியதிகளை (எவையேனுமிருப்பின்) குறித்துரைத்தால்,

மட்டுமே செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, நியாயமான அறிவித்தல் கொடுப்பதன்மீது, இவ்வொழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் விலக்களிப்பை மாற்றலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

### பாகம் II

### கப்பற் பாதுகாப்பு

**4.** (1) இவ்வொழுங்குவிதிகளின் பாகம் II இன் நோக்கங்களுக்காகவும் சமவாயத்தின் அத்தியாயம் XI-2 இனதும் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையினதும் ஏற்பாடுகளுக்கிணங்கவும், பணிப்பாளர் தலைமையதிபதி, இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகவுள்ள இலங்கைக் கப்பல்களின்மீது மற்றும் வெளிநாட்டுக் கப்பல்களின்மீது கப்பற் பாதுகாப்பின் வலுவுறுத்துகை உரித்தாக்கப்பட்டவராதல் வேண்டும்.

(2) சமவாயத்தின் அத்தியாயம் XI-2 இனதும் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வினதும் ஏற்பாடுகளின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதி பின்வருவனவற்றுக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்:-

(அ) கப்பல்களுக்காக ஏற்புடையற்பாலனவான பாதுகாப்பு மட்டத்தை நிர்ணயித்தல்;

(ஆ) கப்பற் பாதுகாப்புத் திட்டத்தையும் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட ஒரு திட்டத்துக்கான இயைபான திருத்தங்களையும் அங்கீகரித்தல்;

(இ) சமவாயத்தின் அத்தியாயம் XI-2 இனதும் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வினதும் ஏற்பாடுகளுக்குக் கப்பல்கள் இணங்கியொழுகுவதனைச் சரிபார்த்தலும் சர்வதேசக் கப்பற் பாதுகாப்புச் சான்றிதழைக் கப்பல்களுக்கு வழங்குதலும்;

(ஈ) சமவாயத்தின் அத்தியாயம் XI-2 இன் 9 ஆம் ஒழுங்குவிதிக்கிணங்கக் கட்டுப்பாட்டு மற்றும் இணங்கியொழுகுகை வழிமுறைகளைப் பிரயோகித்தல்;

(உ) அங்கீகரிக்கப்பட்ட கப்பற் பாதுகாப்புத் திட்டங்களைப் பரீட்சித்தல்;

(ஊ) சமவாயத்தின் அத்தியாயம் XI-2 இன் 13 ஆம் ஒழுங்குவிதிக்கிணங்க ஒழுங்கமைப்புக்கும் கப்பற்றொழில் மற்றும் துறைமுகத் தொழில்களுக்கும் தகவலை அறிவித்தல்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையில் விதித்துரைக்கப்பட்டவாறு பாதுகாப்பு மட்டங்களை நிர்ணயித்தல் வேண்டுமென்பதுடன் இலங்கையின் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துள்ள கப்பல்களுக்குப் பாதுகாப்பு மட்டத் தகவல் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துதலும் வேண்டும். எவ்வாறாயினும், பாதுகாப்பு மட்டத்திலான மாற்றங்கள் இடம்பெறும்போது, சூழ்நிலை தேவைப்படுத்துகின்றவாறு பாதுகாப்பு மட்டத் தகவல் நாளதுவரையாக்கப்படுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உபஒழுங்குவிதியைப் பின்பற்றி, பின்வருவன உட்பட, தோதான பாதுகாப்பு மட்டத்தை நிர்ணயிப்பதில் பின்வரும் காரணிகள் கவனத்துட்கொள்ளப்படுதல் வேண்டும்:-

(அ) அச்சுறுத்தல் பற்றிய தகவல் நம்பத்தக்கதாகவிருக்கும் அளவு;

(ஆ) அச்சுறுத்தல் பற்றிய தகவல் ஆதாரப்படுத்தப்பட்டதாகவிருக்கும் அளவு;

(இ) அச்சுறுத்தல் பற்றிய தகவல் குறிப்பிட்டதாக அல்லது உடனடியாக நிகழவுள்ளதாகவிருக்கும் அளவு; அத்துடன்

(ஈ) அத்தகையவொரு பாதுகாப்புச் சம்பவத்தின் இயல்திற விளைவுகள்.

**5.** (1) ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் ஆ வில் கொடுக்கப்பட்ட வழிகாட்டுகையைக் கணக்குக்கெடுத்து, ஓர் இலங்கைக் கப்பலின் கம்பனியொன்று சமவாயத்தின் அத்தியாயம் XI – 2 இனதும் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வினதும் இயைபான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(2) கப்பலொன்று, ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் ஆ வில் கொடுக்கப்பட்ட வழிகாட்டுகையைக் கணக்குக்கெடுத்து, சமவாயத்தின் அத்தியாயம் XI – 2 இனதும் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வினதும் இயைபான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய இணங்கியொழுகுகை, ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகச் சரிபார்க்கப்பட்டுச் சான்றுப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(3) கப்பலொன்று இலங்கையினுள்ளான ஒரு துறைமுகத்தினுட் பிரவேசிக்குமுன்னர் அல்லது அதில் இருக்கையில், அக்கப்பலானது எந்த அரசின் கொடியைப் பறக்கவிடுகின்றதோ அந்த அரசினால் நிர்ணயிக்கப்பட்ட பாதுகாப்பு மட்டத்தைப்பார்க்க இலங்கை அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட பாதுகாப்பு மட்டம் உயர்வாகவிருப்பின், அத்தகைய பாதுகாப்பு மட்டத்திற்கான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(4) இலங்கைக் கப்பலொன்று ஓர் ஒப்பந்தஞ்செய்கின்ற அரசினுள்ளான ஒரு துறைமுகத்தினுட் பிரவேசிக்குமுன்னர் அல்லது அதில் இருக்கையில், பணிப்பாளர் தலைமையதிபதியினால் நிர்ணயிக்கப்பட்ட பாதுகாப்பு மட்டத்தைப்பார்க்க ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட பாதுகாப்பு மட்டம் உயர்வாகவிருப்பின், அத்தகைய பாதுகாப்பு மட்டத்துக்கான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(5) ஒரு கப்பலின் கப்பற்றலைவர், ஓர் உயர்வான பாதுகாப்பு மட்டத்துக்கான மாற்றத்துக்குத் தகாத தாமதமின்றிப் பதிலிறுத்தல் வேண்டும்.

(6) கப்பலொன்று சமவாயத்தின் அத்தியாயம் XI – 2 இன் அல்லது ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகாதவிடத்து, அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறோர் ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டதும் அக்கப்பலுக்கு ஏற்புடையற்பாலதுமான பாதுகாப்பு மட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகமுடியாதவிடத்து, அப்போது, அக்கப்பலின் கப்பற்றலைவர், ஏதேனும் கப்பல் / துறைமுக இடைமுகத்தை நடாத்துமுன்னர் அல்லது துறைமுகத்தினுட் பிரவேசிக்குமுன்னர், இவற்றுள் எது முன்னர் நிகழ்கின்றதோ அதற்குமுன்னர், பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது அந்த அரசாங்கத்தின் பெயர்குறிக்கப்பட்ட அதிகாரசபைக்கு அறிவித்தல் வேண்டும்.

**6**. ஒரு கப்பலின் கம்பெனி, அக்கப்பலின் கப்பற்றலைவர் எல்லா நேரங்களிலும் இலங்கை அரசாங்கத்தினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் எத்தகவலினூடாகப் பின்வருவோரை நிலைநாட்டலாமோ அத்தகவலைக் கப்பலில் கிடைக்கக்கூடியதாக வைத்திருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்:-

(அ) கப்பற்றொகுதி உறுப்பினர்களை அல்லது அக்கப்பலின் தொழிலிலான ஏதேனும் பதவியில் கப்பலில் அந்நேரத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அல்லது ஈடுபடுத்தப்பட்டுள்ள வேறு ஆட்களை நியமிப்பதற்குப் பொறுப்பாகவுள்ள ஆள்;

(ஆ) கப்பலைத் தொழிலுக்கமர்த்துதல் பற்றி முடிபுசெய்வதற்குப் பொறுப்பாகவுள்ள ஆள்; அத்துடன்

(இ) கப்பலானது ஒரு வாடகைக்கமர்த்தல் ஒப்பந்தத்தின் நியதிகளின்கீழ் தொழிலுக்கமர்த்தப்படும் விடயங்களில், அத்தகைய வாடகைக்கமர்த்தல் ஒப்பந்தத்துக்கான திறத்தவர்கள்.

**7**. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, பின்வருவன உட்பட, சமவாயத்தின் அத்தியாயம் XI – 2 இலும் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ விலும் விதித்துரைக்கப்பட்டவாறான குறித்தசில பாதுகாப்புத்தொடர்பான செயற்பாடுகளைப் பொறுப்பேற்கும்படி ஏற்றங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு ஒழுங்கமைப்புகளுக்கு அதிகாரமளிக்கலாம்:-

(அ) பணிப்பாளர் தலைமையதிபதியின் சார்பில், கப்பற் பாதுகாப்புத் திட்டங்களை அல்லது அவற்றுக்கான திருத்தங்களை அங்கீகரித்தல்; அத்துடன்

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதியின் சார்பில், சமவாயத்தின் அத்தியாயம் XI – 2 இனதும் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வினதும் தேவைப்பாடுகளுக்கு இலங்கைக் கப்பல்கள் இணங்கியொழுகுவதனைச் சரிபார்த்தலும் சான்றுப்படுத்தலும்.

(2) ஓர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு ஒழுங்கமைப்பொன்றுக்கு அதிகாரமளிக்கும் போது, பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய ஒழுங்கமைப்பின் தகுதியைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும். ஏற்றங்கீகரிக்கப்பட்டவொரு பாதுகாப்பு ஒழுங்கமைப்பு பின்வருவனவற்றை எடுத்துக்காட்டுவதற்கு இயன்றதாதல் வேண்டும்:-

(அ) பாதுகாப்பின் இயைபான அம்சங்களிலான நிபுணத்துவம்;

(ஆ) கப்பல்கள், துறைமுக வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் தொடர்பிலும் துறைமுக வசதிகள் தொடர்பிலும் சேவைகளை வழங்குவதாயிருப்பின், கப்பல் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் பற்றிய அறிவுட்பட, கப்பல் மற்றும் துறைமுகத் தொழிற்பாடுகள் பற்றித் தோதான அறிவு;

(இ) கப்பல் அல்லது துறைமுக இடைமுகம் உட்பட, கப்பல் மற்றும் துறைமுக வசதித் தொழிற்பாடுகளின்போது ஏற்படக்கூடிய சாத்தியமுள்ள பாதுகாப்பு அபாயங்களையும் அத்தகைய அபாயங்களை எவ்வாறு மிகக் குறைவாக்குவதனையும் மதிப்பீடு செய்வதற்கான ஆற்றல்;

(ஈ) அவர்களின் ஆளணியினரினது நிபுணத்துவத்தைப் பேணுவதற்கும் சீராக்குவதற்குமான இயலுமாந்தன்மை;

(உ) அவர்களின் ஆளணியினரினது தொடர்ச்சியான நம்பிக்கையானதன்மையைக் கண்காணிப்பதற்கான இயலுமாந்தன்மை;

(ஊ) பாதுகாப்புக் கூருணர்வு விடயங்களின் அதிகாரமளிக்கப்படாத வெளிவிடுகையை, அல்லது அவற்றுக்கான அணுக்கத்தைத் தவிர்ப்பதற்குத் தோதான வழிமுறைகளைப் பேணுவதற்கான இயலுமாந்தன்மை;

(எ) சமவாயத்தின் அத்தியாயம் XI – 2 இனதும் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வினதும் தேவைப்பாடுகளும் இயைபான தேசிய மற்றும் சர்வதேசச் சட்டவாக்கங்களும் பாதுகாப்புத் தேவைப்பாடுகளும் பற்றிய அறிவு;

(ஏ) அந்நேரத்திலுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல்களும் பாங்குகளும் பற்றிய அறிவு;

(ஐ) ஆயுதங்கள், அபாயகரமான பதார்த்தங்கள் மற்றும் உபாயங்களை ஏற்றங்கீகரித்தலும் கண்டுபிடித்தலும்மீதான அறிவு;

(ஒ) பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவிருக்கக்கூடிய சாத்தியங்கொண்ட ஆட்களின் பண்புகளையும் நடத்தைசார் பாங்குகளையும் ஓரங்காட்டாத அடிப்படையில் ஏற்றங்கீகரித்தல்மீதான அறிவு;

(ஓ) பாதுகாப்பு வழிமுறைகளைத் தட்டிக்கழிப்பதற்குப் பயன்படுத்தப்படும் தொழினுட்பங்கள்மீதான அறிவு; அத்துடன்

(ஔ) பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புச் சாதனங்களும் முறைமைகளும் அவற்றின் தொழிற்பாடுசார் வரையறைகளும்.

(3) ஓர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு ஒழுங்கமைப்புக்குக் குறிப்பிட்ட கடமைகளைக் கையளிக்கும்போது, பணிப்பாளர் தலைமையதிபதி, பணியைப் பொறுப்பேற்பதற்குத் தேவையான தகுதிகளை அந்த ஏற்றங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு ஒழுங்கமைப்பு கொண்டிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(4) ஒரு கப்பற் பாதுகாப்பு மதிப்பீட்டை அல்லது திட்டத்தைப் பூர்த்திசெய்தலை உள்ளடக்கவேண்டிய கப்பற் பாதுகாப்பு மதிப்பீடுகளும் கப்பற் பாதுகாப்புத் திட்டங்களுமுட்பட, ஏற்றங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு ஒழுங்கமைப்பொன்று பாதுகாப்புக் கருமங்கள்மீது கம்பெனிகளுக்கு மதியுரையும் அளிக்கலாம் அல்லது உதவியும் வழங்கலாம்.

(5) 2022 ஆம் ஆண்டின் சனவரி மாதம் 6 ஆந் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வணிகக்கப்பற்றொழில் (ஆய்வுகளும் சான்றுப்படுத்துகைகளும்) ஒழுங்குவிதிகளிற் குறிப்பீடுசெய்யப்பட்டு ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகள், இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் உபஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்டு ஏற்றங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு ஒழுங்கமைப்புகளாக நியமிக்கப்படலாம்; ஆயின், அத்தகைய ஒழுங்கமைப்பு (2) ஆம், (3) ஆம் உபஒழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளை எதிர்கொள்ளுதல் வேண்டும்.

**8.** பணிப்பாளர் தலைமையதிபதி, இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துள்ள கப்பல்களின் கப்பற் பாதுகாப்பு மதிப்பீடுகளும் கப்பற் பாதுகாப்புத் திட்டங்களும் தொடர்பாகப் பாதுகாப்புக் கூருணர்வு விடயங்களின் அதிகாரமளிக்கப்படாத வெளிவிடுகை அல்லது அவற்றுக்கான அணுக்கத்தைத் தவிர்ப்பதற்குத் தோதான வழிமுறைகள் நிலைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**9.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி, கப்பல் / துறைமுக இடைமுகம் அல்லது ஒரு கப்பலிலிருந்து மற்றொரு கப்பலுக்கான செயற்பாடு ஆட்களுக்கு, ஆதனத்துக்கு அல்லது சூழலுக்கு ஏற்படுத்தக்கூடிய அபாயத்தை மதிப்பீடுசெய்வதன்மூலம் பாதுகாப்பு வெளிப்படுத்துகையொன்று எப்போது தேவைப்படுகின்றதென்பதைத் தீர்மானித்தல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் உபஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பாதுகாப்புப்பற்றிய வெளிப்படுத்துகை, ஒரு துறைமுக வசதிக்கும் ஒரு கப்பலுக்குமிடையே (அல்லது கப்பல்களுக்கிடையே) பகிரப்படக்கூடிய பாதுகாப்புத் தேவைப்பாடுகளுக்கு முகங்கொடுத்தல் வேண்டுமென்பதுடன் ஒவ்வொன்றுக்குமான பொறுப்பையும் குறிப்பிடுதலும் வேண்டும்.

(3) பின்வரும் சந்தர்ப்பங்களின்போது கப்பலொன்று ஒரு பாதுகாப்புப்பற்றிய வெளிப்படுத்துகை பூர்த்திசெய்யப்படுவதனைக் கோரலாம்:-

(அ) கப்பலானது துறைமுக வசதியைப்பார்க்க அல்லது அது இடைமுகம் செய்கின்ற மற்றொரு கப்பலைப்பார்க்க உயர்வான பாதுகாப்பு மட்டத்தில் தொழிற்படும்போது;

(ஆ) குறித்தசில சர்வதேசக் கடற்பயணங்களை அல்லது அக்கடற்பயணங்களின்மீதான குறிப்பிட்ட கப்பல்களை மேவுகின்றதாக அரசாங்கங்களுக்கிடையே பாதுகாப்புப் பற்றிய வெளிப்படுத்துகையொன்றின்மீதான உடன்படிக்கையொன்று இருக்கும்போது;

(இ) ஏற்புடையற்பாலவாறு, கப்பலை உட்படுத்துகின்ற அல்லது துறைமுக வசதியை உட்படுத்துகின்ற ஒரு பாதுகாப்பு அச்சுறுத்தல் அல்லது ஒரு பாதுகாப்புச் சம்பவம் இருந்துள்ளபோது;

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட துறைமுக வசதிப் பாதுகாப்புத் திட்டமொன்றை வைத்திருந்து நடைமுறைப்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படாத ஒரு துறைமுகத்தில் கப்பலானது இருக்கும்போது; அல்லது

(உ) அங்கீகரிக்கப்பட்ட கப்பற் பாதுகாப்புத் திட்டமொன்றை வைத்திருந்து நடைமுறைப்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படாத மற்றொரு கப்பலுடன் கப்பலானது ஒரு கப்பலிலிருந்து மற்றொரு கப்பலுக்கான செயற்பாடுகளை நடாத்தும்போது.

(4) பாதுகாப்புப் பற்றிய வெளிப்படுத்துகையானது பின்வருவோரினால் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும்:-

(அ) கப்பற்றலைவரினால் அல்லது தோதானதாகவிருப்பின் கப்பலின்சார்பில் கப்பற் பாதுகாப்பு அலுவலரினால்;

(ஆ) துறைமுக வசதிப் பாதுகாப்பு அலுவலரினால் அல்லது துறைமுக வசதியின் சார்பில் கரைப்பக்கப் பாதுகாப்புக்குப் பொறுப்பாகவுள்ள வேறேதேனும் குழுவினால்.

(5) பாதுகாப்புப்பற்றிய வெளிப்படுத்துகையொன்று, *18* ஆம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்டவாறான குறைந்தபட்சக் காலப்பகுதியொன்றுக்கு ஒரு கப்பலில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

**10.** (1) சமவாயத்தின் அத்தியாயம் XI – 2 இன் 6 ஆம் ஒழுங்குவிதியின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்றதான கப்பற் பாதுகாப்பு எச்சரிக்கை முறைமையொன்று கப்பலொன்றில் பொருத்தப்படுதல் வேண்டும்.

(2) கப்பற் பாதுகாப்பு எச்சரிக்கை முறைமை செயலூக்குவிக்கப்படும்போது அது பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கப்பலிலிருந்து கரைக்கான பாதுகாப்பு எச்சரிக்கையொன்றை ஆரம்பித்தலும் அனுப்புதலும் வேண்டும்; இச்சூழ்நிலைகளில் அது, கப்பலையும், அதன் அமைவிடத்தையும் அடையாளங்காட்டுகின்றதும் கப்பலின் பாதுகாப்பு அச்சுறுத்தலின்கீழுள்ளது அல்லது அது இணக்கப்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டுகின்றதுமான கம்பெனியை உள்ளடக்கலாம்.

(3) இரண்டாம் உபஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தேவைப்பாட்டுடன்சேர்த்து, கப்பலிலிருந்து கரைக்கான பாதுகாப்பு எச்சரிக்கை முறைமை செயலூக்குவிக்கப்படும்போது, பணிப்பாளர் தலைமையதிபதியினால் வெளியிடப்பட்ட இயைபான நடைமுறைப்படுத்தல் நியமங்களில் குறித்துரைக்கப்பட்ட ஏனைய திறத்தவர்களுக்குக் கப்பலிலிருந்து கரைக்கான பாதுகாப்பு எச்சரிக்கையொன்றை அது ஆரம்பித்து அனுப்புதலும் வேண்டும்.

(4) உபஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட கப்பற் பாதுகாப்பு எச்சரிக்கை முறைமைக்கான தேவைப்பாடு, சமவாயத்தின் அத்தியாயம் IV இன் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்காகப் பொருத்தப்பட்ட வானொலி நிறுவுகையைப் பயன்படுத்துவதன்மூலம் இணங்கியொழுகப்படலாம்; ஆயின், இவ்வொழுங்குவிதியின் எல்லாத் தேவைப்பாடுகளுக்கும் இணங்கியொழுகப்படுதல் வேண்டும்.

(5) இலங்கைக் கப்பலொன்றிலிருந்து ஒரு கப்பற் பாதுகாப்பு எச்சரிக்கை பற்றிய அறிவிப்பைப் பணிப்பாளர் தலைமையதிபதி பெறும்போது, பணிப்பாளர் தலைமையதிபதி, அக்கப்பல் அப்போது எந்த அரசின் சுற்றயலில் தொழிற்படுகின்றதோ அந்த அரசுக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(6) வெளிநாட்டுக் கப்பலொன்றிலிருந்து ஒரு கப்பற் பாதுகாப்பு எச்சரிக்கை பற்றிய அறிவிப்பைப் பணிப்பாளர் தலைமையதிபதி பெறும்போது, பணிப்பாளர் தலைமையதிபதி, அந்தக் கப்பல் எந்த அரசின் கொடியைப் பறக்கவிடுகின்றதோ அந்த அரசுக்கும், தோதானதாயின், அக்கப்பல் அப்போது எந்த அரசின் சுற்றயலில் தொழிற்படுகின்றதோ அந்த அரசுக்கும் உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

*11. (1)* கப்பற்றலைவர், அவரது உயர்தொழிற்சார் நிதானத்தின்படி கப்பலின் காப்பையும் பாதுகாப்பையும் பேணுவதற்கு அவசியமாகவுள்ள ஏதேனும் முடிபை எடுப்பதிலிருந்து அல்லது நிறைவேற்றுவதிலிருந்து கம்பெனியினால், வாடகைக்கமர்த்துநரினால் அல்லது வேறெவரேனும் ஆளினால் கட்டுப்படுத்தப்படுதலாகாது. இது, (ஓர் ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கத்தினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்டவர்களென அடையாளங்காணப்பட்டோர் தவிர்ந்த) ஆட்களுக்கான அல்லது அவர்களின் பொருட்களுக்கான அணுக்கத்தை மறுப்பதனையும் கொள்கலன்கள் அல்லது வேறு மூடப்பட்ட கப்பற்சரக்கு இடப்பெயர்வு அலகுகள் உட்பட, கப்பற்சரக்கைக் கப்பலில் ஏற்றுவதற்கு மறுப்பதனையும் உள்ளடக்கும்.

*(2)* கப்பற்றலைவரின் உயர்தொழில்சார் நிதானத்தின்படி, கப்பலின் தொழிற்பாடுகளின்போது அதற்கு ஏற்புடையற்பாலனவான எவையேனும் காப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்பாடுகளுக்கிடையே முரண்பாடொன்று எழுந்தால், கப்பலின் காப்பைப் பேணுவதற்கு அவசியமாகவுள்ள அத்தேவைப்பாடுகளுக்குக் கப்பற்றலைவர் பயன்கொடுத்தல் வேண்டும். அத்தகைய விடயங்களில் கப்பற்றலைவர் தற்காலிகப் பாதுாப்பு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தலாம் என்பதுடன் உடனடியாகப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கும் அத்துடன் தோதானதாயின் கப்பலானது எந்த ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கத்தின் துறைமுகத்தில் தொழிற்படுகின்றதோ அல்லது அதனுட் பிரவேசிக்க உட்கருதுகின்றதோ அந்த ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கத்துக்கும் அறிவித்தலும் வேண்டும்.

*(3)* உபஒழுங்குவிதி (3) றின்கீழான அத்தகைய எவையேனும் தற்காலிகப் பாதுகாப்பு வழிமுறைகள், இயன்றவரை உச்சளவுக்கு, நிலவுகின்ற பாதுகாப்பு மட்டத்துடன் ஒரே அளவினவாகவிருத்தல் வேண்டும்.

*12. (1)* கப்பலொன்று பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட கப்பற் பாதுகாப்புத் திட்டமொன்றைக் கப்பலில் கொண்டுசெல்லுதல் வேண்டும். ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறான மூன்று பாதுகாப்பு மட்டங்களுக்காகவும் திட்டமானது ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

*(2)* அத்தகைய திட்டம் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ விலுள்ள ஏற்பாடுகளுக்கு முகங்கொடுத்தல் வேண்டுமென்பதுடன் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் ஆ வில் கொடுக்கப்பட்ட வழிகாட்டுகையைக் கணக்குக்கெடுத்து அபிவிருத்தி செய்யப்படுதலும் வேண்டும்; அத்துடன் அது ஆங்கில மொழியில் எழுதப்படுதலும் வேண்டும்.

*(3)* இவ்வொழுங்குவிதியின் (5) ஆம் உபஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கமைய, ஏற்றங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு ஒழுங்கமைப்பொன்று குறிப்பிட்டவொரு கப்பலுக்காகக் கப்பற் பாதுகாப்புத் திட்டத்தைத் தயாரிக்கலாம்.

*(4)* பணிப்பாளர் தலைமையதிபதி, ஏற்றங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு ஒழுங்கமைப்புகளுக்கு, கப்பற் பாதுகாப்புத் திட்டங்களின் அல்லது முன்னர் அங்கீகரிக்கப்பட்டவொரு திட்டத்துக்கான திருத்தங்களின் பரிசீலனையையும் அங்கீகாரத்தையும் பொறுப்பிக்கலாம்.

*(5)* அத்தகைய விடயங்களில், குறிப்பிட்டவொரு கப்பலுக்காகக் கப்பற் பாதுகாப்புத் திட்டமொன்றின் அல்லது அதன் திருத்தங்களின் பரிசீலனையையும் அங்கீகாரத்தையும் பொறுப்பேற்கின்ற ஏற்றங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு ஒழுங்கமைப்பு, ஒன்றில் 13 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் கப்பற் பாதுகாப்பு மதிப்பீட்டின் அல்லது பரிசீலனையின்கீழுள்ள கப்பற் பாதுகாப்புத் திட்டத்தின் அல்லது அதன் திருத்தங்களின் தயாரிப்பில் சம்பந்தப்பட்டிருத்தலாகாது.

*(6)* ஒரு கப்பற் பாதுகாப்புத் திட்டத்தை அல்லது முன்னர் அங்கீகரிக்கப்பட்ட திட்டமொன்றின் திருத்தங்களை அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பித்தலானது, அத்திட்டம் அல்லது திருத்தங்கள் எந்தப் பாதுகாப்பு மதிப்பீட்டின் அடிப்படையின்மீது அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளனவோ அந்தப் பாதுகாப்பு மதிப்பீட்டுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

*(7)* கப்பற் பாதுகாப்புத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட பாதுகாப்புச் செயற்பாடுகளின் உள்ளகக் கணக்காய்வுகளை நடாத்துகின்ற அல்லது அதன் நடைமுறைப்படுத்துகையை மதிப்பீடுசெய்கின்ற ஆளணியினர், கம்பெனியின் அல்லது கப்பலின் அளவு மற்றும் தன்மை காரணமாக இது செயல்முறைக்குகந்ததல்லாததாக இருந்தாலொழிய, கணக்காய்வுசெய்யப்படுகின்ற செயற்பாடுகளிலிருந்து சுதந்திரமானவர்களாக இருத்தல் வேண்டும்.

*(8)* திட்டத்துக்கான இயைபான திருத்தங்கள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டாலொழிய, அங்கீகரிக்கப்பட்டவொரு கப்பற் பாதுகாப்புத் திட்டத்துக்கான அல்லது அங்கீகரிக்கப்பட்டவொரு திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பாதுகாப்புச் சாதனத்துக்கான எந்த மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படலாகாதென்பதைப் பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானித்தல் வேண்டும். அத்தகைய எவையேனும் மாற்றங்கள் ஆகக்குறைந்தது சமவாயத்தின் அத்தியாயம் XI – 2 இலும் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ விலும் விதித்துரைக்கப்பட்ட அவ்வழிமுறைகளைப்போன்ற பயனையாவது உடையனவாகவிருத்தல் வேண்டும்.

(9) எட்டாம் உபஒழுங்குவிதியைப் பின்பற்றி, பணிப்பாளர் தலைமையதிபதியினால் குறிப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ள கப்பற் பாதுகாப்புத் திட்டத்துக்கான அல்லது பாதுகாப்புச் சாதனத்துக்கான மாற்றங்களின் தன்மை, அத்தகைய அங்கீகாரத்தைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றவொரு முறையில் ஆவணப்படுத்தப்படுதல் வேண்டும். இவ்வங்கீகாரம் கப்பலில் கிடைக்கக்கூடியதாதல் வேண்டுமென்பதுடன் சர்வதேசக் கப்பற் பாதுகாப்புச் சான்றிதழுடன் (அல்லது இடைக்காலச் சர்வதேசக் கப்பற் பாதுகாப்புச் சான்றிதழுடன்) சேர்த்து முன்வைக்கப்படுதலும் வேண்டும். இம்மாற்றங்கள் தற்காலிகமானவையாகவிருப்பின், மூல அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகள் அல்லது சாதனம் மீளநிலைப்படுத்தப்பட்டதும், இந்த ஆவணப்படுத்துகை கப்பலினால் இனிமேலும் வைத்திருக்கப்படுவது தேவைப்படமாட்டாது.

(10) கப்பற் பாதுகாப்புத் திட்டம் ஓர் இலத்திரனியற் படிவத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டும். அதன் அதிகாரமளிக்கப்படாத நீக்கிவிடுகை, அழிவு அல்லது திருத்தத்தைத் தடுப்பதனை இலக்காகக்கொண்ட நடவடிக்கைமுறைகளின்மூலம் அது பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

(11) திட்டமானது அதிகாரமளிக்கப்படாத அணுக்கம் அல்லது வெளிவிடுகையிலிருந்து பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

(12) உபஒழுங்குவிதி (13) றில் குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளிற்றவிர, வெளிநாட்டுக் கப்பல்களின் கப்பற் பாதுகாப்புத் திட்டங்கள், சமவாயத்தின் அத்தியாயம் XI – 2 இன் 9 ஆம் ஒழுங்குவிதிக்கிணங்கக் கட்டுப்பாட்டு மற்றும் இணங்கியொழுகுகை வழிமுறைகளை நிறைவேற்றுவதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் சோதனையிடப்படுவதற்கு அமைந்தனவல்ல.

(13) கப்பலானது சமவாயத்தின் அத்தியாயம் XI – 2 இன் அல்லது ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகவில்லையென்றும், இணங்கியொழுகாமையைச் சரிபார்ப்பதற்கான அல்லது நிவர்த்திசெய்வதற்கான ஒரே வழி, கப்பற் பாதுகாப்புத் திட்டத்தின் இயைபான தேவைப்பாடுகளைப் பரிசீலனைசெய்வதாகுமென்றும் நம்புவதற்குப் பணிப்பாளர் தலைமையதியினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்குத் தெளிவான ஏதுக்கள் இருப்பின், இணங்கியொழுகாமை தொடர்பாகத் திட்டத்தின் குறிப்பிட்ட பிரிவுகளுக்கான வரையறுக்கப்பட்ட அணுக்கம், விதிவிலக்கான சூழ்நிலைகளில், ஆனால் சம்பந்தப்பட்ட கப்பலின் ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கத்தின் அல்லது கப்பற்றலைவரின் சம்மதத்துடன் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றது. எனினும், ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வின் பிரிவு 9.4, உட்பிரிவுகள் .2, .4, .7, .15, .17 மற்றும் .18 என்பன தொடர்பாகத் திட்டத்திலுள்ள ஏற்பாடுகள் அந்தரங்கமான தகவலாகக் கொள்ளப்படுவதுடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கங்களினால் வேறுவகையாக உடன்பட்டுக்கொள்ளப்பட்டாலொழிய, சோதனைக்கு அமைந்தனவாகவும் முடியாது.

**13.** (1) ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் ஆ வில் கொடுக்கப்பட்ட வழிகாட்டுகையைக் கணக்குக்கெடுத்து, ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வுக்கிணங்க, கப்பலொன்றின் பாதுகாப்பை மதிப்பிடுவதற்குத் தோதான திறன்களைக்கொண்ட ஆட்களினால் கப்பற் பாதுகாப்பு மதிப்பீடு நிறைவேற்றப்படுவதனைக் கம்பெனிப் பாதுகாப்பு அலுவலர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) ஒழுங்குவிதி 12 இன் (5) ஆம் உபஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கமைய, ஏற்றங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு ஒழுங்கமைப்பொன்று குறிப்பிட்டவொரு கப்பலின் கப்பற் பாதுகாப்பு மதிப்பீட்டை நிறைவேற்றலாம்.

(3) கப்பற் பாதுகாப்பு மதிப்பீடானது ஸ்தலத்திலான பாதுகாப்பு ஆய்வொன்றையும் ஆகக்குறைந்தது ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வில் விதித்துரைக்கப்பட்ட அம்சங்களையேனும் உள்ளடக்குதல் வேண்டும்.

(4) கப்பற் பாதுகாப்பு மதிப்பீடு, கம்பெனியினால் ஆவணப்படுத்தப்படுதலும், பரிசீலனைசெய்யப்படுதலும், ஏற்றுக்கொள்ளப்படுதலும் மற்றும் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

**14.** (1) இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகும் கப்பலொன்று, ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வில் குறித்துரைக்கப்பட்டவாறான சரிபார்த்தல்களுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

(2) கப்பல்களின் சரிபார்த்தல்கள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி, எவ்வாறாயினும், 7 ஆம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏற்றங்கீகரிக்கப்பட்டவொரு பாதுகாப்பு ஒழுங்கமைப்புக்குச் சரிபார்த்தல்களைப் பொறுப்பிக்கலாம்.

(3) சரிபார்த்தலின்பின்னர் கப்பலின் பாதுகாப்பு முறைமையும் ஏதேனும் இணைந்த பாதுகாப்புச் சாதனமும் இவ்வொழுங்குவிதிகளினதும், ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வில் அங்கீகரிக்கப்பட்ட கப்பற் பாதுகாப்புத் திட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இசைந்தொழுகும்வகையில் பேணப்படுதல் வேண்டும். உபஒழுங்குவிதி (1) றின்கீழான

ஏதேனும் சரிபார்த்தல் பூர்த்திசெய்யப்பட்டுள்ளபின்னர், பணிப்பாளர் தலைமையதிபதியின் வலுவளிப்பின்றிப் பாதுகாப்பு முறைமையிலும் ஏதேனும் இணைந்த பாதுகாப்புச் சாதனத்திலும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கப்பற் பாதுகாப்புத் திட்டத்திலும் மாற்றங்கள் எவையும் செய்யப்படுதலாகாது.

**15.** (1) ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆரம்ப அல்லது புதுப்பித்தற் சரிபார்த்தல்களுக்குப்பின்னர் இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகவுள்ள கப்பலொன்றுக்குச் சர்வதேசக் கப்பற் பாதுகாப்புச் சான்றிதழொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய சான்றிதழ் ஒன்றில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது ஓர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு ஒழுங்கமைப்பினால் வழங்கப்படுதல் அல்லது புறக்குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(3) (அ) ஓராம் உபஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சர்வதேசக் கப்பற் பாதுகாப்புச் சான்றிதழ், வழங்குகைத் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளை விஞ்சாதிருக்கவேண்டியவொரு காலப்பகுதிக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(ஆ) ஏலவேயுள்ள சான்றிதழ் முடிவுறும் தேதிக்குமுன்னர் மூன்றுமாதங்களினுள் புதுப்பித்தற் சரிபார்த்தல் பூர்த்திசெய்யப்படும்போது, புதிய சான்றிதழானது, புதுப்பித்தற் சரிபார்த்தல் பூர்த்திசெய்யப்பட்ட தேதியிலிருந்து ஏலவேயுள்ள சான்றிதழ் முடிவுறும் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு தேதிவரை செல்லுபடியாதல் வேண்டும்.

(இ) ஏலவேயுள்ள சான்றிதழ் முடிவுற்ற தேதிக்குப்பின்னர் புதுப்பித்தற் சரிபார்த்தல் பூர்த்திசெய்யப்படும்போது, புதிய சான்றிதழானது, புதுப்பித்தற் சரிபார்த்தல் பூர்த்திசெய்யப்பட்ட தேதியிலிருந்து ஏலவேயுள்ள சான்றிதழ் முடிவுறும் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு தேதிவரை செல்லுபடியாதல் வேண்டும்.

(ஈ) ஏலவேயுள்ள சான்றிதழ் முடிவுறும் தேதிக்குமுன்னர் மூன்றுமாதங்களுக்கு மேற்பட புதுப்பித்தற் சரிபார்த்தல் பூர்த்திசெய்யப்படும்போது, புதுப்பித்தற் சரிபார்த்தல் பூர்த்திசெய்யப்பட்ட தேதியிலிருந்து புதிய சான்றிதழானது புதுப்பித்தற் சரிபார்த்தல் பூர்த்திசெய்யப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு தேதிவரை செல்லுபடியாதல் வேண்டும்.

(உ) ஐந்தாண்டுகளுக்குக் குறைவான காலப்பகுதியொன்றுக்குச் சான்றிதழொன்று வழங்கப்படின், பணிப்பாளர் தலைமையதிபதி, சான்றிதழின் செல்லுபடியாந்தன்மையைப் பந்தி (அ) வில் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்சக் காலப்பகுதிவரை முடிவுறும் தேதிக்கப்பால் நீடிக்கலாம்; ஆயின், ஐந்தாண்டுக் காலப்பகுதியொன்றுக்குச் சான்றிதழொன்று வழங்கப்படும்போது ஏற்புடையனவானவையும் ஒழுங்குவிதி 14(1) றில் குறிப்பீடு செய்யப்பட்டவையுமான சரிபார்த்தல்கள் தோதானவாறு நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(ஊ) புதுப்பித்தற் சரிபார்த்தலொன்று பூர்த்திசெய்யப்பட்டு ஏலவேயுள்ள சான்றிதழ் முடிவுறும் தேதிக்குமுன்னர் புதிய சான்றிதழொன்றை வழங்கமுடியாதிருப்பின் அல்லது கப்பலில் இடமுடியாதிருப்பின், பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியின் சார்பில் செயலாற்றுகின்ற ஏற்றங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு ஒழுங்கமைப்பு, ஏலவேயுள்ள சான்றிதழைப் புறக்குறிப்பிடலாமென்பதுடன் அத்தகையவொரு சான்றிதழ், முடிவுறும் தேதியிலிருந்து ஐந்து மாதங்களை விஞ்சாதிருக்கவேண்டிய மேலதிகக் காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியுள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

(எ) ஒரு கப்பலின் சான்றிதழொன்று முடிவுறும் நேரத்தின்போது அக்கப்பலானது சரிபார்க்கப்படவேண்டிய துறைமுகமொன்றில் இராதிருப்பின், பணிப்பாளர் தலைமையதிபதி சான்றிதழின் செல்லுபடிக் காலப்பகுதியை நீடிக்கலாம் ஆனால் இந்நீடிப்பு, அது சரிபார்க்கப்படவேண்டிய துறைமுகத்துக்கான அதன் கடற்பயணத்தைப் பூர்த்திசெய்வதற்கு அக்கப்பலை அனுமதிக்கும் நோக்கத்துக்காக மட்டும் மற்றும் அவ்வாறு செய்வது முறையானதும் நியாயமானதுமெனக் காணப்படும் விடயங்களில் மட்டும் வழங்கப்படுதல் வேண்டும். சான்றிதழெதுவும் மூன்று மாதங்களுக்கு மேற்பட்டவொரு காலப்பகுதிக்கு நீடிக்கப்படுதலாகாதென்பதுடன், நீடிப்பொன்று எக்கப்பலுக்கு வழங்கப்படுகின்றதோ அக்கப்பல், அது சரிபார்க்கப்படவேண்டிய துறைமுகத்தை வந்தடைவதன்மீது, அத்தகைய நீடிப்பின் பயனைக்கொண்டு புதிய சான்றிதழொன்றில்லாமல் அத்துறைமுகத்தை விட்டுச்செல்வதற்கு உரித்துடையதாதலுமாகாது. புதுப்பித்தற் சரிபார்த்தல் பூர்த்திசெய்யப்படும்போது, புதிய சான்றிதழானது, அந்த நீடிப்பு வழங்கப்படுமுன்னர் ஏலவேயுள்ள சான்றிதழ் முடிவுறும் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு தேதிவரை செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

(ஏ) இவ்வுபஒழுங்குவிதியின் மேற்போந்த ஏற்பாடுகளின்கீழ் நீடிக்கப்பட்டிராததும் குறுகிய கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ள கப்பலொன்றுக்கு வழங்கப்பட்டதுமான சான்றிதழொன்று, அதிற் குறிப்பிடப்பட்ட முடிவுறும் தேதியிலிருந்து ஒருமாதம்வரையான அருட்காலப்பகுதிக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் நீடிக்கப்படலாம். புதுப்பித்தற் சரிபார்த்தல் பூர்த்திசெய்யப்படும்போது, புதிய சான்றிதழானது, அந்நீடிப்பு வழங்கப்படுமுன்னர் ஏலவேயுள்ள சான்றிதழ் முடிவுறும் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு தேதிக்குச் செல்லுபடியானதாதல் வேண்டும்.

(ஐ) ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வின் சரிபார்த்தற் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி பூர்த்திசெய்யப்படுமுன்னர் இடைநிலைச் சரிபார்த்தலொன்று பூர்த்திசெய்யப்படின், அப்போது :

(i) சான்றிதழின்மீது காட்டப்பட்ட முடிவுறும் தேதியானது, இடைநிலைச் சரிபார்த்தல் எத்தேதியன்று பூர்த்திசெய்யப்பட்டதோ அத்தேதிக்குப் பிந்திய மூன்றாண்டுகளுக்கு மேற்பட்டதாகவிராதவொரு தேதிவரை புறக்குறிப்புமூலம் திருத்தப்படுதல் வேண்டும்;

(ii) முடிவுறும் தேதி மாற்றமடையாதிருக்கலாம்; ஆயின், ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வினால் விதித்துரைக்கப்பட்ட சரிபார்த்தல்களுக்கிடையேயான அதிகபட்சக் காலஇடைவெளிகள் விஞ்சப்படாதிருக்கும்வகையில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மேலதிகச் சரிபார்த்தல்கள் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(4) உபஒழுங்குவிதி (1) றின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழொன்று பின்வரும் விடயங்களுள் எவற்றிலும் செல்லுபடியில்லாதொழிதல் வேண்டும்:-

(அ) ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிகளினுள் இயைபான சரிபார்த்தல்கள் பூர்த்திசெய்யப்படாதிருப்பின்;

(ஆ) ஏற்புடையதாயின், ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வுக்கிணங்கச் சான்றிதழ் புறக்குறிப்பிடப்படாவிடின்;

(இ) ஒரு கம்பெனியினால் முன்னர் தொழிற்படுத்தப்படாத கப்பலொன்றின் தொழிற்பாட்டுக்கான பொறுப்பை அக்கம்பெனி ஏற்கும்போது; அத்துடன்

(ஈ) கப்பலானது வேறோர் அரசின் கொடிக்குக் கைமாற்றப்படுவதன்மேல்.

(5) (அ) வேறோர் ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கத்தின் கொடிக்குக் கப்பலொன்று கைமாற்றப்படும் விடயத்தில், பணிப்பாளர் தலைமையதிபதி, இயன்றளவு விரைவாக, கைமாற்றத்துக்கு முன்னர் கப்பலினால் கொண்டுசெல்லப்பட்ட சர்வதேசக் கப்பற் பாதுகாப்புச் சான்றிதழின் பிரதிகளை, அல்லது அது தொடர்பான எல்லாத் தகவல்களையும் மற்றும் கிடைக்கக்கூடியனவாகவுள்ள சரிபார்த்தல் அறிக்கைகளின் பிரதிகளை அந்த ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கத்தின் நிருவாகத்துக்கு அனுப்புதல் வேண்டும், அல்லது

(ஆ) ஒரு கம்பெனியினால் முன்னர் தொழிற்படுத்தப்பட்ட கப்பலொன்றின் தொழிற்பாட்டுக்கான பொறுப்பை ஏற்கின்ற அக்கம்பெனியின் விடயத்தில், முன்னைய கம்பெனியானது, இயன்றளவு விரைவாக, சர்வதேசக் கப்பற் பாதுகாப்புச் சான்றிதழுடன் அல்லது ஒழுங்குவிதி 16 (2) இல் விவரிக்கப்பட்ட சரிபார்த்தல்களை வசதிப்படுத்துவதுடன் தொடர்புபட்ட ஏதேனும் தகவலின் பிரதிகளை, பெறுகின்ற கம்பெனிக்கு அனுப்புதல் வேண்டும்.

(6) சர்வதேசக் கப்பற் பாதுகாப்புச் சான்றிதழானது, ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவைக்கான பிற்சேர்க்கையிற் கொடுக்கப்பட்ட மாதிரிகளுக்கு நேரொத்த படிவத்தில் தயாரிக்கப்படுதலும் அது ஆங்கிலமொழியிலிருத்தலும் வேண்டும்.

**16.** (1) ஓர் இடைக்காலச் சர்வதேசக் கப்பற் பாதுகாப்புச் சான்றிதழ் ஒழுங்குவிதி 15 இல் குறிப்பீடுசெய்யப்பட்ட சர்வதேசக் கப்பற் பாதுகாப்புச் சான்றிதழ் வழங்கப்படும்வரை, பின்வரும் சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது ஓர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு ஒழுங்கமைப்பினால் வழங்கப்படலாம்:-

(அ) கப்பலொன்று சான்றிதழின்றி இருக்கும்போது, ஒப்படைப்பின்மீது அல்லது அது சேவையினுட் பிரவேசிக்குமுன்னர் அல்லது மீளப்பிரவேசிக்குமுன்னர்;

(ஆ) ஓர் ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கத்தின் கொடியிலிருந்து இலங்கைக் கொடிக்குக் கப்பலொன்றைக் கைமாற்றும்போது;

(இ) ஓர் ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கமாகவிராத ஓர் அரசிடமிருந்து இலங்கைக் கொடிக்குக் கப்பலொன்றைக் கைமாற்றும்போது;

(ஈ) ஒரு கம்பெனியினால் முன்னர் தொழிற்படுத்தப்படாத கப்பலொன்றின் தொழிற்பாட்டுக்கான பொறுப்பை அக்கம்பனி ஏற்கும்போது.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் உபஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட இடைக்காலச் சர்வதேசக் கப்பற் பாதுகாப்புச் சான்றிதழ், பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு ஒழுங்கமைப்பு பின்வருவனவற்றைச் சரிபார்த்துள்ளபோது மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும்:-

(அ) ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வினால் தேவைப்படுத்தப்பட்ட கப்பற் பாதுகாப்பு மதிப்பீடு பூர்த்திசெய்யப்பட்டுள்ளமை;

(ஆ) சமவாயத்தின் அத்தியாயம் XI – 2 இனதும் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வினதும் ஏற்பாடுகளின் தேவைப்பாடுகளை எதிர்கொள்கின்ற கப்பற் பாதுகாப்புத் திட்டத்தின் பிரதியொன்று கப்பலில் வழங்கப்பட்டு, பரிசீலனைக்கும் அங்கீகாரத்துக்கும் சமர்ப்பிக்கப்பட்டு, கப்பலில் நடைமுறைப்படுத்தப்படுகின்றமை;

(இ) தேவைப்படின், அத்தியாயம் XI – 2 இன் 6 ஆம் ஒழுங்குவிதியினது ஏற்பாடுகளின் தேவைப்பாடுகளை எதிர்கொள்கின்ற கப்பற் பாதுகாப்பு எச்சரிக்கை முறைமை கப்பலில் ஏற்பாடுசெய்யப்படுகின்றமை;

(ஈ) கம்பெனிப் பாதுகாப்பு அலுவலர்:

(i) பின்வருவனவற்றை உறுதிப்படுத்தியுள்ளபோது:

(அ) சட்டக்கோவையின் பாகம் அ வுக்கு இணங்கியொழுகுவதற்காகக் கப்பற் பாதுகாப்புத் திட்டத்தின் பரிசீலனை,

(ஆ) திட்டமானது அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்று, அத்துடன்

(இ) திட்டமானது கப்பலில் நடைமுறைப்படுத்தப்படுகின்றதென்று, அத்துடன்

(ii) கப்பலானது ஆறுமாதங்களினுள் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வுக்கிணங்கத் தேவைப்பட்ட சரிபார்த்தலை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யுமெனக் கம்பனிப் பாதுகாப்பு அலுவலர் அதனுடாகத் திருப்திப்படுகின்ற பயிற்சிகள், பிரயோகங்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வுகளுக்கான ஒழுங்கேற்பாடுகளுட்பட, அவசியமான ஒழுங்கேற்பாடுகளை நிலைநாட்டியுள்ளபோது;

(உ) தேவைப்படுத்தப்பட்ட சரிபார்த்தல்களை நிறைவேற்றுவதற்கு ஒழுங்கேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளபோது;

(ஊ) கப்பற்றலைவர், கப்பலின் பாதுகாப்பு அலுவலர் மற்றும் குறிப்பிட்ட பாதுகாப்புக் கடமைகளைக்கொண்ட கப்பலின் வேறு ஆளணியினர், ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வில் குறித்துரைக்கப்பட்டவாறாகத் தமது கடமைகளுடனும் பொறுப்புக்களுடனும் கப்பலில் இடப்பட்ட கப்பற் பாதுகாப்புத் திட்டத்தின் இயைபான ஏற்பாடுகளுடனும் பரிச்சயமாகவுள்ளபோது அத்துடன் கப்பலின் ஆளணியினரினது தொழிற்பாட்டு மொழியில் அல்லது அவர்களினால் விளங்கிக்கொள்ளப்படும் மொழிகளில் அவர்களுக்கு அத்தகைய தகவல் வழங்கப்பட்டுள்ளபோது; அத்துடன்

(எ) கப்பற் பாதுகாப்பு அலுவலர் இவ்வொழுங்குவிதிகளினது ஏற்பாடுகளின் தேவைப்பாடுகளை எதிர்கொள்ளும்போது.

(3) ஓர் இடைக்காலச் சர்வதேசக் கப்பற் பாதுகாப்புச் சான்றிதழ், வழங்குகைத் தேதியிலிருந்து 6 மாதங்களுக்கு, அல்லது 15 ஆம் ஒழுங்குவிதியினால் தேவைப்பட்ட சர்வதேசக் கப்பற் பாதுகாப்புச் சான்றிதழ் வழங்கப்படும்வரை, இவற்றுள் எது முதலில் இடம்பெறுகின்றதோ அதுவரை, செல்லுபடியுடையதாதல் வேண்டுமென்பதுடன் நீடிக்கப்படுதலுமாகாது.

(4) சர்வதேசக் கப்பற் பாதுகாப்புச் சான்றிதழானது, ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவைக்கான பிற்சேர்க்கையிற் கொடுக்கப்பட்ட மாதிரிகளுக்கு நேரொத்த படிவத்தில் தயாரிக்கப்படுதலும் அது ஆங்கிலமொழியிலிருத்தலும் வேண்டும்.

**17.** (1) பணிப்பாளர் தலைமையதிபதி, சமவாயம் ஏற்புடையதாகவுள்ளவொரு நாட்டின் அரசாங்கத்தினது கோரிக்கையின்பேரில், கப்பலானது சரிபார்க்கப்படுவதனைச் செய்விக்கலாமென்பதுடன் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவெனத் திருப்திப்படின், கப்பலுக்குச் சர்வதேசக் கப்பற் பாதுகாப்புச் சான்றிதழை அல்லது ஓர் இடைக்காலச் சர்வதேசக் கப்பற் பாதுகாப்புச் சான்றிதழை வழங்குதலும் வேண்டும் அல்லது அதன் வழங்குகைக்கு அதிகாரமளித்தலும் வேண்டும்; அத்துடன் தோதானவிடத்து, ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவைக்கிணங்க, கப்பலின்மீது அச்சான்றிதழைப் புறக்குறிப்பிடுதல் வேண்டும் அல்லது அது புறக்குறிப்பிடப்படுவதற்கு அதிகாரமளித்தல் வேண்டும். அவ்வாறு வழங்கப்பட்ட ஏதேனும் சான்றிதழ், கப்பலானது எந்த அரசின் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துடையதாகவுள்ளதோ அல்லது உரித்துடையதாகவிருக்குமோ அந்த அரசினது அரசாங்கத்தின் கோரிக்கையின்பேரில் அது வழங்கப்பட்டுள்ளதென்ற பொருள்பட்ட கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அது இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழைப்போன்று அதே வலுவைக் கொண்டிருத்தலும் அதே ஏற்றங்கீகாரத்தைப் பெறுதலும் வேண்டும். சான்றிதழின் பிரதியொன்றும் சரிபார்த்தல் அறிக்கையின் பிரதியொன்றும் இயன்றளவு விரைவாகக் கோரிக்கைசெய்கின்ற அரசாங்கத்துக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, சமவாயம் ஏற்புடையதாகவுள்ளவொரு நாட்டின் அரசாங்கத்தை, இலங்கைக் கப்பலொன்று சரிபார்க்கப்படுவதனைச் செய்விக்கும்படி கோரலாம் என்பதுடன் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவெனத் திருப்திப்படின், அக்கப்பலுக்கு ஒரு சர்வதேசக் கப்பற் பாதுகாப்புச் சான்றிதழை அல்லது இடைக்காலச் சர்வதேசக் கப்பற் பாதுகாப்புச் சான்றிதழை வழங்கலாம் அல்லது அதன் வழங்குகைக்கு அதிகாரமளிக்கலாம்; அத்துடன் தோதானவிடத்து, ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவைக்கிணங்க, அக்கப்பலின்மீது அச்சான்றிதழைப் புறக்குறிப்பிடலாம் அல்லது புறக்குறிப்பிடுவதற்கு அதிகாரமளிக்கலாம். அவ்வாறு வழங்கப்பட்ட ஏதேனும் சான்றிதழ், அது இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையின்பேரில் வழங்கப்பட்டுள்ளதென்ற பொருள்பட்ட கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அது பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்டவொரு சான்றிதழ் என்றாற்போன்று அதே வலுவைக் கொண்டிருத்தலும் அதே ஏற்றங்கீகாரத்தைப் பெறுதலும் வேண்டும்.

**18.** (1) கப்பற் பாதுகாப்புத் திட்டத்திலும் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ விலும் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் பற்றிய பதிவேடுகளைக் குறைந்தபட்சம் 12 மாதகாலப்பகுதிக்காக அல்லது துறைமுக வசதிகளில் கடைசிப் பத்து வந்தடைதல்களுக்காக, இவற்றுள் எது கூடுதலாகவுள்ளதோ அதற்காக, கப்பற்றலைவர் கப்பலில் பேணுதல் வேண்டும்.

(2) பதிவேடுகளானவை –

(அ) ஆங்கில மொழியில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) இலத்திரனியற் படிவத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டும். அத்தகையவொரு விடயத்தில், அவற்றின் அதிகாரமளிக்கப்படாத நீக்கிவிடுகை, அழிவு அல்லது திருத்தத்தைத் தடுப்பதனை இலக்காகக்கொண்ட நடவடிக்கைமுறைகளினால் அவை பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

(இ) அதிகாரமளிக்கப்படாத அணுக்கத்திலிருந்து அல்லது வெளிவிடுகையிலிருந்து அவை பாதுகாக்கப்படுதல் வேண்டும்

**19.** (1) கம்பெனியொன்று ஒரு கம்பெனிப் பாதுகாப்பு அலுவலரைப் பெயர்குறித்தல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு பெயர்குறிக்கப்பட்ட ஆள், கம்பெனி தொழிற்படுத்துகின்ற கப்பல்களின் எண்ணிக்கை அல்லது வகைகளைப் பொறுத்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களுக்காகக் கம்பெனிப் பாதுகாப்பு அலுவலராகச் செயலாற்றலாம்; ஆயின், இவ்வாள் எந்தக் கப்பல்களுக்காகப் பொறுப்பாகவுள்ளாரென்பது தெளிவாக அடையாளங்காணப்படுதல் வேண்டும்.

(2) கம்பெனியொன்று, அது தொழிற்படுத்துகின்ற கப்பல்களின் எண்ணிக்கை அல்லது வகைகளைப் பொறுத்து, கம்பெனிப் பாதுகாப்பு அலுவலர்களாகப் பல்வேறு ஆட்களைப் பெயர்குறிக்கலாம்; ஆயின், ஒவ்வோராளும் எக்கப்பலுக்காகப் பொறுப்பாகவுள்ளாரென்பது தெளிவாக அடையாளங்காணப்படுதல் வேண்டும்.

(3) கம்பெனிப் பாதுகாப்பு அலுவலரின் கடமைகளும் பொறுப்புக்களும் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வில் குறித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்.

**20.** (1) கம்பெனியொன்று அதன் கப்பல்களுள் ஒவ்வொன்றின்மீதும் கப்பற் பாதுகாப்பு அலுவலரொருவரைப் பெயர்குறித்தல் வேண்டும்.

(2) கப்பற் பாதுகாப்பு அலுவலரின் கடமைகளும் பொறுப்புக்களும் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வில் குறித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்.

**21.** (1) ஒழுங்குவிதி 19 இல் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பனிப் பாதுகாப்பு அலுவலரும் தோதான கரையிலுள்ள ஆளணியினரும் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் ஆ வுக்கும் ஒழுங்கமைப்பினால் அபிவிருத்திசெய்யப்பட்ட வழிகாட்டுநெறிகளுக்கும் இணங்க அறிவுள்ளவர்களாகவும், பயிற்சிபெற்றவர்களாகவும், தோதான முறையில் சான்றுப்படுத்தப்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(2) ஒழுங்குவிதி 20 இல் குறிப்பீடுசெய்யப்பட்ட கப்பற் பாதுகாப்பு அலுவலர், 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல் மற்றும் காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளுக்கிணங்க அறிவுள்ளவராகவும், பயிற்சியைப் பூர்த்திசெய்துள்ளவராகவும், தேர்ச்சிச் சான்றிதழொன்றை வைத்திருப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

(3) குறிப்பிட்ட பாதுகாப்புக் கடமைகளையும் பொறுப்புக்களையும் கொண்டுள்ள கப்பற்றளத்திலான ஆளணியினர் கப்பற் பாதுகாப்புத் திட்டத்தில் விவரிக்கப்பட்டவாறாகக் கப்பற் பாதுகாப்புக்கான அவர்களின் பொறுப்புக்களைப் புரிந்துகொள்ளுதல் வேண்டுமென்பதுடன் 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல் மற்றும் காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளுக்கிணங்கப் போதிய அறிவுள்ளவர்களாகவும், பயிற்சியைப் பூர்த்திசெய்துள்ளவர்களாகவும், தேர்ச்சிச் சான்றிதழொன்றை வைத்திருப்பவர்களாகவும் இருத்தலும் வேண்டும்.

(4) பெயர்குறிக்கப்பட்ட பாதுகாப்புக் கடமைகள் இல்லாதவர்களான கப்பற்றளத்திலான ஆளணியினர் 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல் மற்றும் காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளுக்கிணங்கப் பயிற்சியைப் பூர்த்திசெய்திருத்தலும், பாதுகாப்பு விழிப்புணர்ச்சிக்கான தேர்ச்சிச் சான்றிதழொன்றை வைத்திருத்தலும் வேண்டும்.

**22.** (1) கப்பலின் வகை, கப்பல் ஆளணியினரிலான மாற்றங்கள், சென்றடையவேண்டிய துறைமுகவசதிகள் மற்றும் வேறு இயைபான சூழ்நிலைகள் என்பவற்றைக் கணக்குக்கெடுத்து, தோதான காலஇடைவெளிகளில் கப்பல்களின்மீது பயிற்சிகள் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) உபஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட பயிற்சிகள் ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையேனும் நடாத்தப்படுதல் வேண்டும். மேலதிகமாக, கப்பலின் ஆளணியினருள் 25 சதவீதத்துக்கு மேற்பட்டோர் ஏதேனுமொரு நேரத்தில் கடந்த மூன்று மாதங்களினுள் அக்கப்பலின்மீதான ஏதேனும் பயிற்சியில் முன்னர் பங்குபற்றியிராத ஆளணியினரினால் மாற்றப்பட்டுள்ளவிடத்து, மாற்றத்திலிருந்து ஒரு வாரத்தினுள் பயிற்சி ஒன்று நடாத்தப்படுதல் வேண்டும்.

(3) கப்பற்றளத்திலான பயிற்சிகள், பின்வருவன போன்ற சம்பவங்களை மேவுதல் வேண்டும்:

(அ) கப்பலின்மீது அதிகாரமளிக்கப்படாத வருகையாளர்களை அடையாளங் காணுதலும் தேடுகையிடுதலும்;

(ஆ) ஒரு பாதுகாப்பு அச்சுறுத்தலாக அமையக்கூடிய பொருட்களை ஏற்றங்கீகரித்தல்;

(இ) கப்பலை அணுகுவதிலிருந்து தாக்குதல்களைத் தடுப்பதற்கான முறைகள்;

(ஈ) மட்டுப்படுத்தப்பட்ட இடப்பரப்புகளை ஏற்றங்கீகரித்தல்; அத்துடன்

(உ) வெளியகற்றுகைக்காக ஒன்றுதிரட்டுதல்.

(4) கம்பனிப் பாதுகாப்பு அலுவலர், தோதான காலஇடைவெளிகளில் பிரயோகங்களில் பங்குபற்றுவதன்மூலம் கப்பற் பாதுகாப்புத் திட்டங்களின் பயனுள்ள ஒருங்கிணைப்பையும் நடைமுறைப்படுத்துகையையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(5) நான்காம் உபஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பிரயோகங்கள், கம்பெனிப் பாதுகாப்பு அலுவலர்கள், துறைமுக வசதிப் பாதுகாப்பு அலுவலர்கள், பணிப்பாளர் தலைமையதிபதி மற்றும் கப்பற் பாதுகாப்பு அலுவலர்கள் என்போர் கிடைக்கக்கூடியவர்களாகவிருப்பின் அவர்களின் பங்குபற்றுகையை உள்ளடக்குதல் வேண்டுமென்பதுடன் பிரயோகங்களுக்கிடையே 18 மாதங்களுக்கு மேற்படாத இடைவெளிகளின்றி ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும் ஆகக்குறைந்தது ஒருதடவையேனும் நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

(6) உபஒழுங்குவிதி (4) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட பிரயோகங்களானவை, தொடர்பாடல்கள், ஒருங்கிணைப்பு, வளங்கள் கிடைக்கக்கூடியமை மற்றும் பதிலிறுப்பைப் பரீட்சித்தல் வேண்டும். பிரயோகங்களானவை:

(அ) முழு அளவினவாகவும் நேரடியாக நிகழ்வனவாகவுமிருத்தல் வேண்டும்;

(ஆ) சமமட்ட ஒப்புருவாக்கம் அல்லது கருத்தரங்கு; அல்லது

(இ) தேடுகை மற்றும் மீட்பு அல்லது அவசரகாலப் பதிலிறுப்புப் பிரயோகங்கள் போன்றவையும் நடாத்தப்பட்டவையுமான வேறு பிரயோகங்களுடன் இணைந்திருத்தல் வேண்டும்.

(7) வேறோர் ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கத்துடனான பிரயோகமொன்றில் கம்பனியின் பங்குபற்றுகை பணிப்பாளர் தலைமையதிபதியினால் ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**23.** (1) ஒரு கப்பல் பாதுகாப்புத் திட்டம் உயர்பாதுகாப்பு அபாய நிலப்பரப்புக்களினூடான செல்கைக்காக நிலைப்படுத்தப்படுகின்றது என்பதையும், இது, கப்பற்றலைவருடனும் கப்பற் பாதுகாப்பு அலுவலருடனும் பிரயோகிக்கப்படுகின்றது, அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றது மற்றும் அவர்களுடன் கலந்துரையாடப்படுகின்றது என்பதையும் உறுதிப்படுத்துவதற்குக் கம்பெனியின் பாதுகாப்பு அலுவலர் ஊக்குவிக்கப்படுகின்றார்.

(2) உயர் பாதுகாப்பு இடப்பரப்பை இடைப்பெயர்ச்சி செய்வதற்குமுன்னர் கவனமாகத் திட்டமிடப்பட்டு நிறுவப்பட்ட கப்பற் பாதுகாப்பு வழிமுறைகளின் வழங்குகை மிக்க வலிமையாக விதந்துரைக்கப்படுகின்றது.

(3) அபாயகரமான பண்டங்கள் அல்லது ஆபத்தான பதார்த்தங்களுக்கண்மையில் ஆயுதங்களைப் பயன்படுத்துவதன்மீதான குறிப்பிட்ட வழிகாட்டுநெறிகளைக் கப்பற்பாதுகாப்புத் திட்டங்கள் உள்ளடக்குதல் வேண்டும். கப்பலின்மீது கொண்டுசெல்லப்படும் சுடுபடைக்கலன்கள் பற்றித் துறைமுகத்தை வந்தடைவதன்மீது அறிக்கையிடப்படக்கூடியதாகலாமென்பதுடன் துறைமுக வருகைக்காலத்தின்போது அவை ஒப்படைக்கப்படவேண்டியனவாகலாம் அல்லது பாதுகாப்பாக வைத்திருக்கப்படவேண்டியனவாகலாம்.

**24.** (1) கப்பலொன்று இலங்கையிலுள்ள துறைமுக வசதியொன்றில் இருக்கும்போது பணிப்பாளர் தலைமையதிபதியினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களினால் கட்டுப்பாட்டுக்கு அமைந்ததாகும்; அவர்கள், ….. ஆம் ஆண்டின் ….. ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க வணிகக் கப்பற்றொழில் (ஆய்வுகளும் சான்றுப்படுத்துகைகளும்) ஒழுங்குவிதிகளின் 19ஆம் ஒழுங்குவிதியின்கீழ் பணிகளை நிறைவேற்றுகின்ற அதே அலுவலர்களாகவிருக்கலாம். அத்தகைய கட்டுப்பாடானது, இவ்வொழுங்குவிதிகளின் 15ஆம், 16ஆம் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட செல்லுபடியானவொரு சர்வதேசக் கப்பற் பாதுகாப்புச் சான்றிதழ் அல்லது செல்லுபடியானவோர் இடைக்காலச் சர்வதேசக் கப்பற் பாதுகாப்புச் சான்றிதழ் கப்பலில் இருக்கின்றதனைச் சரிபார்ப்பதற்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்; கப்பலானது இவ்வொழுங்குவிதிகளின் அல்லது ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகவில்லையென நம்புவதற்குத் தெளிவான ஏதுக்கள் இருந்தாலொழிய, அவை செல்லுபடியாகவிருப்பின் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) கட்டுப்பாட்டு மற்றும் இணங்கியொழுகுகை வழிமுறைகள், சமவாயத்தின் அத்தியாயம் XI-2 இன் 9ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்கவிருத்தல் வேண்டும்.

(3) இலங்கையின் துறைமுக வசதியொன்றினுட் பிரவேசிப்பதற்கு உட்கருதுகின்ற ஒவ்வொரு கப்பலும், இலங்கை அரசாங்கத்தினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களின் கோரிக்கையின்மீது சமவாயத்தின் அத்தியாயம் XI-2 இன் 9ஆம் ஒழுங்குவிதியில் விவரிக்கப்பட்ட பாதுகாப்புத் தகவலை வழங்குதல் வேண்டும். அத்தகைய தகவலை வழங்கத் தவறுதல் துறைமுகத்தினுட் பிரவேசிப்பதற்கான மறுப்பை விளைவிக்கலாம் என்ற புரிந்துணர்வின்மீது கப்பற்றலைவர் அவ்வாறு செய்வதற்கு மறுக்கலாம்.

**25.** பணிப்பாளர் தலைமையதிபதி, இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துள்ள குறிப்பிட்டவொரு கப்பலை அல்லது கப்பல்களின் தொகுதியை, இவ்வொழுங்குவிதிகளின் அல்லது ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வில் விதித்துரைக்கப்பட்டவற்றிற்குச் சமமான வேறு பாதுகாப்பு வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதிக்கலாம்; ஆயின், அத்தகைய பாதுகாப்பு வழிமுறைகள், ஆகக்குறைந்தது இவ்வொழுங்குவிதியில் அல்லது ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வில் விதித்துரைக்கப்பட்டவற்றைப் போன்றாவது பயனுடையனவாதல் வேண்டும். அத்தகைய பாதுகாப்பு வழிமுறைகளை அனுமதிக்கின்ற பணிப்பாளர் தலைமையதிபதி, அவைபற்றிய விபரங்களை ஒழுங்கமைப்புக்கு அறிவித்தல் வேண்டும்.

## பாகம் III
## துறைமுக வசதிப் பாதுகாப்பு

**26.** *(1)* இப்பாகத்தின் நோக்கத்துக்காகவும் இலங்கையின் நியாயாதிக்கத்தினுள் துறைமுக வசதிப் பாதுகாப்பு மற்றும் கப்பல் துறைமுக இடைமுகம் தொடர்பில் சமவாயத்தின் அத்தியாயம் XI-2 டுக்கும் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவைக்கும் இணங்கவும், கடற்படை ஏவுநர் பெயர்குறிக்கப்பட்ட அதிகாரியாதல் வேண்டும். பெயர்குறிக்கப்பட்ட அதிகாரிக்கு இப்பாகத்தின் ஏற்பாடுகளினது வலுவுறுத்துகை உரித்தாக்கப்படுகின்றது.

*(2)* சமவாயத்தின் அத்தியாயம் XI-2 டையும் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வையும் பின்பற்றி, பெயர்குறிக்கப்பட்ட அதிகாரி பின்வருவனவற்றுக்குப் பொறுப்பாவார்:-

(அ) துறைமுக வசதிகளுக்காக ஏற்புடையதான பாதுகாப்பு மட்டத்தை நிர்ணயித்தல்;

(ஆ) துறைமுக வசதிப் பாதுகாப்புத் திட்டத்தைத் தயாரிப்பதற்குப் பொறுப்பாகவிருக்கும் துறைமுக வசதிப் பாதுகாப்பு அலுவலரொருவரைப் பெயர்குறிப்பதற்கு ஆள்புலத்தினுள் அமைந்துள்ள துறைமுக வசதிகளுள் எவை தேவையாகவுள்ளனவென்பதைத் தீர்மானித்தல்;

(இ) துறைமுக வசதிப் பாதுகாப்பு மதிப்பீட்டையும் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடொன்றுக்கான அடுத்துப்பின்னரான எவையேனும் திருத்தங்களையும் பூர்த்திசெய்து அங்கீகரிப்பதனை உறுதிப்படுத்துதல்;

(ஈ) துறைமுக வசதிப் பாதுகாப்புத் திட்டத்தையும் முன்னர் அங்கீகரிக்கப்பட்டவொரு சட்டத்துக்கான அடுத்துப்பின்னரான எவையேனும் திருத்தங்களையும் அங்கீகரித்தல்; அத்துடன்

(உ) அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களைப் பரீட்சித்தல்.

*(3)* பெயர்குறிக்கப்பட்ட அதிகாரி பாதுகாப்பு மட்டங்களை நிர்ணயித்து இலங்கையினுள்ளான துறைமுக வசதிகளுக்கும், இலங்கையினுள்ளான ஒரு துறைமுகத்தினுட் பிரவேசிக்குமுன்னர் அல்லது ஒரு துறைமுகத்தில் இருக்கையில் கப்பல்களுக்கும் பாதுகாப்பு மட்டத் தகவல் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். பாதுகாப்பு மட்டத்திலான மாற்றங்கள் இடம்பெறும்போது, சூழ்நிலைகள் தேவைப்படுத்துகின்றவாறு பாதுகாப்பு மட்டத் தகவல் நாளதுவரையாக்கப்படுதல் வேண்டும்.

*(4)* உபஒழுங்குவிதி *(3)* றைப் பின்பற்றி, பின்வருவன உட்பட, தோதான பாதுகாப்பு மட்டத்தை நிர்ணயிப்பதில் பின்வரும் காரணிகள் கவனத்துட்கொள்ளப்படுதல் வேண்டும்:-

(அ) அச்சுறுத்தல்பற்றிய தகவல் நம்பகமானதாகவிருக்கும் அளவு;

(ஆ) அச்சுறுத்தல்பற்றிய தகவல் ஆதாரப்படுத்தப்பட்டதாகவிருக்கும் அளவு;

(இ) அச்சுறுத்தல்பற்றிய தகவல் குறிப்பானதாக அல்லது உடனடியாக நிகழப்போவதாகவிருக்கும் அளவு; அத்துடன்

(ஈ) அத்தகையவொரு பாதுகாப்புச் சம்பவத்தின் இயல்திற விளைவுகள்.

**27.** *(1)* துறைமுக வசதிகளானவை, ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் ஆ வில் கொடுக்கப்பட்ட வழிகாட்டுகையைக் கணக்குக்கெடுத்து, சமவாயத்தின் அத்தியாயம் XI-2 இனதும் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வினதும் இயைபான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

*(2)* இலங்கையினுள்ளான துறைமுக வசதியொன்று தொடர்பில், பெயர்குறிக்கப்பட்ட அதிகாரி பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்:-

(அ) துறைமுக வசதிப் பாதுகாப்பு மதிப்பீடுகள் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வினது ஏற்பாடுகளுக்கிணங்க நிறைவேற்றப்படுதலையும், பரிசீலனைசெய்யப்படுதலையும், அங்கீகரிக்கப்படுதலையும்; அத்துடன்

(ஆ) துறைமுக வசதிப் பாதுகாப்பு மதிப்பீடுகள் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வினது ஏற்பாடுகளுக்கிணங்க அபிவிருத்திசெய்யப்படுதலையும், பரிசீலனைசெய்யப்படுதலையும், அங்கீகரிக்கப்படுதலையும், நடைமுறைப்படுத்தப்படுதலையும்.

(3) பாதுகாப்புப்பற்றிய வெளிப்படுத்துகையொன்றைச் சமர்ப்பிப்பது தேவைப்படும்போது உட்பட, துறைமுக வசதிப் பாதுகாப்புத் திட்டமொன்றில் பல்வேறு பாதுகாப்பு மட்டங்களுக்காக முகங்கொடுக்கப்படுவதற்குத் தேவைப்பட்ட வழிமுறைகளைத் தகுதிவாய்ந்த அதிகாரி பெயர்குறித்தலும் அறிவித்தலும் வேண்டும்.

(4) துறைமுக வசதியொன்று எந்தப் பெயர்குறிக்கப்பட்ட அதிகாரியின் ஆள்புலத்தினுள் அமைந்துள்ளதோ அந்தப் பெயர்குறிக்கப்பட்ட அதிகாரியினால் நிர்ணயிக்கப்பட்ட பாதுகாப்பு மட்டங்களின்மேல் செயலாற்றுவதற்கு அது தேவைப்படுத்தப்படுகின்றது. பாதுகாப்பு வழிமுறைகளும், நடவடிக்கைமுறைகளும், பயணிகள், கப்பல், கப்பலின் ஆளணியினர் மற்றும் வருகையாளர்கள், பண்டங்கள் அத்துடன் சேவைகள் என்போருக்கும் என்பவற்றுக்கும் குறைந்தபட்சத் தலையீட்டை அல்லது தாமதத்தை விளைவிக்கும் அத்தகையவொரு முறையில் துறைமுக வசதியில் ஏற்புடையனவாக்கப்படுதல் வேண்டும்.

**28.** (1) துறைமுக வசதிப் பாதுகாப்பு மதிப்பீடு, பெயர்குறிக்கப்பட்ட அதிகாரியினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும். பெயர்குறிக்கப்பட்ட அதிகாரியானவர், இலங்கையினுள் அமைந்துள்ள குறிப்பிட்டவொரு துறைமுக வசதியின் துறைமுக வசதிப் பாதுகாப்பு மதிப்பீட்டை நிறைவேற்றுவதற்கு ஏற்றங்கீகரிக்கப்பட்டவொரு பாதுகாப்பு ஒழுங்கமைப்புக்கு அதிகாரமளிக்கலாம்.

(2) ஏற்றங்கீகரிக்கப்பட்டவொரு பாதுகாப்பு ஒழுங்கமைப்பினால் துறைமுக வசதிப் பாதுகாப்பின் மதிப்பீடு நிறைவேற்றப்பட்டுள்ளபோது, பாதுகாப்பு மதிப்பீடானது பெயர்குறிக்கப்பட்ட அதிகாரியினால் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வுக்கு இணங்கியொழுகப்படுகின்றமைக்காகப் பரிசீலனைசெய்யப்பட்டு அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(3) மதிப்பீட்டை நிறைவேற்றுகின்ற ஆட்கள், ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் ஆ வில் கொடுக்கப்பட்ட வழிகாட்டுகையைக் கணக்குக்கெடுத்து, இச்சட்டக்கோவையின் பாகம் அ வுக்கிணங்கத் துறைமுக வசதியின் பாதுகாப்பை மதிப்பிடுவதற்குத் தோதான தேர்ச்சிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) துறைமுக வசதிப் பாதுகாப்பு மதிப்பீடுகள், துறைமுக வசதியில் மாற்றமடைகின்ற அச்சுறுத்தல்களை அல்லது சிறிய மாற்றங்களைக் கணக்குக்கெடுத்து, காலத்துக்குக்காலம் பரிசீலனை செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் துறைமுக வசதிக்குப் பாரிய மாற்றங்கள் இடம்பெறும்போது எப்போதும் பரிசீலனைசெய்யப்பட்டு நாளதுவரையாக்கப்படுதலும் வேண்டும்.

(5) துறைமுக வசதிப் பாதுகாப்பு மதிப்பீடு, ஆகக்குறைந்தது பின்வரும் அம்சங்களையேனும் உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) பாதுகாப்பதற்கு முக்கியமாகவுள்ள முக்கியமான சொத்துக்களையும் உட்கட்டமைப்பையும் அடையாளங்காணுதலும் மதிப்பிடுதலும்;

(ஆ) பாதுகாப்பு வழிமுறைகளை நிலைநாட்டி அவற்றுக்கு முன்னுரிமையளிப்பதற்கென, சொத்துக்களுக்கும் உட்கட்டமைப்புக்குமான நிகழ்தகு அச்சுறுத்தல்களை அடையாளங்காணுதலும் அவை ஏற்படக்கூடிய சாத்தியமும்;

(இ) எதிர்வழிமுறைகளையும் நடவடிக்கைமுறைசார் மாற்றங்களையும் அடையாளங்காணுதலும், தெரிவுசெய்தலும், அவற்றுக்கு முன்னுரிமையளித்தலும் தாக்கத்துக்குட்படத்தக்க தன்மையைக் குறைப்பதில் அவற்றின் பயனுறுகை மட்டமும்; அத்துடன்

(ஈ) உட்கட்டமைப்பு, கொள்கைகள் மற்றும் நடவடிக்கைமுறைகளிலான மனிதக்காரணிகளுட்பட, பலவீனங்களை அடையாளங்காணுதலும்.

(6) பெயர்குறிக்கப்பட்ட அதிகாரியானவர், இந்தத் துறைமுக வசதிகளின் தொழிற்படுத்துநர், அமைவிடம், தொழிற்பாடு, சாதனம் மற்றும் வடிவமைப்பு என்பன ஒத்திருப்பின், ஒரு துறைமுக வசதிப் பாதுகாப்பு மதிப்பீடு, ஒன்றுக்கு மேற்பட்ட துறைமுக வசதிகளை மேவுவதனை அனுமதிக்கலாம். அத்தகையவோர் ஒழுங்கேற்பாட்டை அனுமதிக்கின்ற பெயர்குறிக்கப்பட்ட அதிகாரி, பணிப்பாளர் தலைமையதிபதியினூடாக அதுபற்றிய விபரங்களை ஒழுங்கமைப்புக்கு அறிவித்தல் வேண்டும்.

(7) துறைமுக வசதிப் பாதுகாப்பு மதிப்பீடு பூர்த்திசெய்யப்படுவதன்மேல், மதிப்பீடு எவ்வாறு நடாத்தப்பட்டது, மதிப்பீட்டின்போது காணப்பட்ட ஒவ்வொரு தாக்கத்துக்குட்படத்தக்க தன்மையும் பற்றிய விவரணமொன்று மற்றும் ஒவ்வொரு தாக்கத்துக்குட்படத்தக்க தன்மைக்கும் முகங்கொடுப்பதற்குப் பயன்படுத்தப்படக்கூடிய எதிர்வழிமுறைகளின் விவரணம் என்பனபற்றிய சுருக்கமொன்றைக் கொண்டுள்ளதான அறிக்கையொன்று தயாரிக்கப்படுதல் வேண்டும். அறிக்கையானது அதிகாரமளிக்கப்படாத அணுக்கத்திலிருந்து அல்லது வெளிவிடுகையிலிருந்து பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

**29.** (1) துறைமுக வசதிப் பாதுகாப்புத் திட்டமொன்று, துறைமுக வசதிப் பாதுகாப்பு மதிப்பீட்டின் அடிப்படையில், கப்பல் அல்லது துறைமுக இடைமுகத்துக்குப் போதியதான ஒவ்வொரு துறைமுக வசதிக்காகவும் அபிவிருத்திசெய்யப்பட்டுப் பேணப்படுதல் வேண்டும். சட்டக்கோவையின் பாகம் அ வில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு, திட்டமானது மூன்று பாதுகாப்பு மட்டங்களுக்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

(2) உபஒழுங்குவிதி (3)றின் ஏற்பாடுகளுக்கமைய, ஏற்றங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு ஒழுங்கமைப்பொன்று குறிப்பிட்டவொரு துறைமுக வசதியின் துறைமுக வசதிப் பாதுகாப்புத் திட்டத்தைத் தயாரிக்கலாம்.

(3) துறைமுக வசதிப் பாதுகாப்புத் திட்டம் பெயர்குறிக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்படுதலும் ஆங்கிலமொழியிலிருத்தலும் வேண்டும்.

(4) ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வில் கொடுக்கப்பட்ட வழிகாட்டுகையைக் கணக்குக்கெடுத்து, ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகையவொரு திட்டம் அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும்.

(5) திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட பாதுகாப்புச் செயற்பாடுகளின் உள்ளகக் கணக்காய்வுகளை நடாத்துகின்ற அல்லது அதன் நடைமுறைப்படுத்துகையை மதிப்பிடுகின்ற ஆளணியினர், துறைமுக வசதியின் அளவும் தன்மையும் காரணமாக இது செயல்முறைக்குகந்ததல்லாதிருந்தாலொழிய, கணக்காய்வுசெய்யப்படுகின்ற செயற்பாடுகளிலிருந்து சுதந்திரமுடையவராதல் வேண்டும்.

(6) துறைமுக வசதிப் பாதுகாப்புத் திட்டம், துறைமுகப் பாதுகாப்புத் திட்டத்துடன் அல்லது வேறேதேனும் துறைமுக அவசரகாலத் திட்டத்துடன் அல்லது திட்டங்களுடன் இணைக்கப்படலாம், அல்லது அதன் அல்லது அவற்றின் பாகமாகவிருக்கலாம்.

(7) பெயர்குறிக்கப்பட்ட அதிகாரியானவர், திட்டத்துக்கான இயைபான திருத்தங்கள் அவரினால் அங்கீகரிக்கப்பட்டாலொழிய, துறைமுக வசதிப் பாதுகாப்புத் திட்டத்துக்கான எந்த மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படுதலாகாது என்பதைத் தீர்மானித்தல் வேண்டும்.

(8) திட்டமானது இலத்திரனியற் படிவமொன்றில் வைத்திருக்கப்படலாம். அத்தகையவொரு விடயத்தில், அதன் அதிகாரமளிக்கப்படாத நீக்கிவிடுகையை, அழிவை அல்லது திருத்தத்தைத் தடுப்பதனை இலக்காகக்கொண்ட நடவடிக்கைமுறைகளினால் அது பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

(9) பெயர்குறிக்கப்பட்ட அதிகாரியானவர், இந்தத் துறைமுக வசதிகளின் தொழிற்படுத்துநர், அமைவிடம், தொழிற்பாடு, சாதனம் மற்றும் வடிவமைப்பு என்பன ஒத்திருப்பின், ஒரு துறைமுக வசதிப் பாதுகாப்புத் திட்டம், ஒன்றுக்கு மேற்பட்ட துறைமுக வசதிகளை மேவுவதனை அனுமதிக்கலாம். அத்தகையவொரு மாற்று ஒழுங்கேற்பாட்டை அனுமதிக்கின்ற பெயர்குறிக்கப்பட்ட அதிகாரி, பணிப்பாளர் தலைமையதிபதியினூடாக அதுபற்றிய விபரங்களை ஒழுங்கமைப்புக்கு அறிவித்தல் வேண்டும்.

**30.** பெயர்குறிக்கப்பட்ட அதிகாரியானவர், கப்பற் பாதுகாப்பு மதிப்பீடுகள், கப்பற் பாதுகாப்புத் திட்டங்கள், துறைமுக வசதிப் பாதுகாப்பு மதிப்பீடுகள் மற்றும் துறைமுக வசதிப் பாதுகாப்புத் திட்டங்கள் அத்துடன் தனிப்பட்ட மதிப்பீடுகள் அல்லது திட்டங்கள் என்பன தொடர்பான பாதுகாப்புக் கூருணர்வு விடயங்களின் அதிகாரமளிக்கப்படாத வெளிவிடுகையை அல்லது அவற்றுக்கான அணுக்கத்தைத் தவிர்ப்பதற்குத் தோதான வழிமுறைகள் நிலைப்படுத்தப்பட்டுள்ளனவென்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**31.** (1) ஒரு துறைமுக வசதியானது துறைமுக வசதிப் பாதுகாப்பு அலுவலரொருவரை நியமித்தல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துறைமுக வசதிகளுக்கான துறைமுக வசதி அலுவலராகச் செயலாற்றலாம்.

(2) சட்டக்கோவையின் பாகம் அ வில் வேறெங்கேனும் குறித்துரைக்கப்பட்டவற்றுக்கு மேலதிகமாக, துறைமுக வசதிப் பாதுகாப்பு அலுவலரின் கடமைகளும் பொறுப்புக்களும் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும், ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படுவதில்லை:-

(அ) இயைபான துறைமுக வசதிப் பாதுகாப்பு மதிப்பீட்டைக் கணக்குக்கெடுத்து, துறைமுக வசதியின் ஆரம்ப எல்லாமடக்கிய பாதுகாப்பு ஆய்வை நடாத்துதல்;

(ஆ) துறைமுக வசதிப் பாதுகாப்புத் திட்டத்தின் அபிவிருத்தியையும் பேணுகையையும் உறுதிப்படுத்துதல்;

(இ) துறைமுக வசதிப் பாதுகாப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதலும் பரீட்சித்தலும்;

(ஈ) தோதான பாதுகாப்பு வழிமுறைகள் தொடர்ந்து நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குத் துறைமுக வசதியின் கிரமமான பாதுகாப்புச் சோதனைகளைப் பொறுப்பேற்றல்;

(உ) குறைவுபாடுகளைத் திருத்துவதற்கும் துறைமுக வசதிக்கான இயைபான மாற்றங்களைக் கணக்குக்கெடுப்பதற்குத் திட்டத்தை நாளதுவரையாக்குவதற்குமெனத் துறைமுக வசதிப் பாதுகாப்புத் திட்டத்துக்குத் தோதானவாறு திரிபுகளை விதந்துரைத்தலும் சேர்த்தலும்;

(ஊ) துறைமுக வசதி ஆளணியினரின் பாதுகாப்பு விழிப்புணர்ச்சியையும் விழிப்புக்கவனத்தையும் அதிகரித்தல்;

(எ) துறைமுக வசதியின் பாதுகாப்புக்குப் பொறுப்பாகவுள்ள ஆளணியினருக்கும் வேறெல்லாத் துறைமுக ஆளணியினருக்கும் போதிய பயிற்சி வழங்கப்பட்டுள்ளதனை உறுதிப்படுத்துதல்;

(ஏ) துறைமுக வசதியின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ள தொடர்பாடல்கள் பற்றி இயைபான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும் பதிவேடுகளைப் பேணுதலும்;

(ஐ) தோதான கம்பெனியுடனும் கப்பற் பாதுகாப்பு அலுவலர்களுடனும் துறைமுக வசதிப் பாதுகாப்புத் திட்டத்தின் நடைமுறைப்படுத்துகையை ஒருங்கிணைத்தல்;

(ஒ) கம்பெனிப் பாதுகாப்பு அலுவலருடனும் அவர்களின் துறைமுக வசதியைப் பயன்படுத்துகின்ற அல்லது பயன்படுத்துவதற்கு உட்கருதுகின்ற கப்பல்களின் கப்பற் பாதுகாப்பு அலுவலருடனும் பாதுகாப்புக் கருமங்களின்மீது பயனுள்ள தொடர்பாடலைப் பேணுதல்;

(ஓ) தோதானவாறு, பாதுகாப்புச் சேவைகளை ஒருங்கிணைத்தல்;

(ஔ) துறைமுக வசதிக்குப் பொறுப்பாகவுள்ள ஆளணியினருக்கான நியமங்கள் எதிர்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்துதல்;

(க) பாதுகாப்புச் சாதனம் ஏதேனுமிருப்பின் அது முறையாகத் தொழிற்படுத்தப்படுதலை, பரீட்சிக்கப்படுதலை, அளவுத்திருத்தப்படுதலை மற்றும் பேணப்படுதலை உறுதிப்படுத்துதல்; அத்துடன்

(ங) விதிவிலக்கான சூழ்நிலைகளில், கப்பலில் ஏறும்படி கோரப்படும்போது அவ்வாறு செய்வதற்கு நாடுகின்றவர்களின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதில் கப்பற் பாதுகாப்பு அலுவலர்களுக்கு உதவுதல்.

**32.** (1) ஒழுங்கமைப்பினால் அபிவிருத்திசெய்யப்பட்ட வழிகாட்டுநெறிகளைக் கணக்குக்கெடுத்து, ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வில் குறித்துரைக்கப்பட்டவாறான பாதுகாப்புப் பயிற்சியையும், இயைபான ஐஎம்ஓ மாதிரிக் கற்கைநெறியையும் துறைமுக வசதிப் பாதுகாப்பு அலுவலரொருவர் பூர்த்திசெய்திருத்தல் வேண்டுமென்பதுடன் இணைந்த பயிற்சிச் சான்றிதழொன்றை வைத்திருத்தலும் வேண்டும்.

(2) குறிப்பிட்ட பாதுகாப்புக் கடமைகளைக் கொண்டுள்ள துறைமுக வசதி ஆளணியினர், துறைமுக வசதிப் பாதுகாப்புத் திட்டத்தில் விவரிக்கப்பட்டவாறு, துறைமுக வசதிப் பாதுகாப்புக்கான தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் புரிந்துகொள்ளுதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டக்கோவையின் பாகம் ஆ வில் கொடுக்கப்பட்ட வழிகாட்டுகையைக் கணக்குக்கெடுத்து, தமது குறித்தளிக்கப்பட்ட கடமைகளைப் புரிவதற்குப் போதிய அறிவையும் ஆற்றலையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

(3) இச்சட்டக்கோவையின் பாகம் ஆ வில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுகையைக் கணக்குக்கெடுத்து, துறைமுக வசதிப் பாதுகாப்புத் திட்டத்தைப் பயனுற நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்கு, துறைமுக வசதியொன்று, துறைமுக வசதியின் தொழிற்பாட்டு வகைகளையும், துறைமுக வசதி ஆளணியினர் மாற்றங்களையும், துறைமுக வசதி எவ்வகையினதான கப்பலுக்குச் சேவையாற்றுகின்றதோ அவ்வகையினதான கப்பலையும் வேறு இயைபான சூழ்நிலைகளையும் கணக்குக்கெடுத்து, தோதான காலஇடைவெளிகளில் பயிற்சிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

*(4)* துறைமுக வசதிப் பாதுகாப்பு அலுவலர், ஒழுங்கமைப்பினால் அபிவிருத்திசெய்யப்பட்ட வழிகாட்டுநெறிகளைக் கணக்குக்கெடுத்து, தோதான காலஇடைவெளிகளில் பிரயோகங்களில் பங்குபற்றுவதன்மூலம் துறைமுக வசதிப் பாதுகாப்புத் திட்டத்தின் பயனுள்ள ஒருங்கிணைப்பினையும் நடைமுறைப்படுத்துகையையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**33.** *(1)* பெயர்குறிக்கப்பட்ட அதிகாரி-

(அ) இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுக வசதியைச் சோதனையிடுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) துறைமுக வசதி இவ்வொழுங்குவிதிகளுக்கும் ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவைக்கும் இணங்கியொழுகினால், இணங்கியொழுகுகைக் கூற்றொன்று எத்தேதியன்று வழங்கப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அத்துறைமுக வசதிதொடர்பில் அக்கூற்றை வழங்குதல் வேண்டும்.

*(2)* உபஒழுங்குவிதி (1) இன்கீழ் குறிப்பீடுசெய்யப்பட்ட இணங்கியொழுகுகைக் கூற்று, பெயர்குறிக்கப்பட்ட அதிகாரியினால் நிலைநாட்டப்பட்ட வருடாந்தச் சரிபார்த்தல் ஒழுங்கேற்பாடுகளுக்கு அமைந்ததாகும்.

*(3)* துறைமுக வசதியொன்று, அத்துறைமுக வசதிக்கு இயைபான ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் தேவைப்பாடுகளுக்கு அல்லது பெயர்குறிக்கப்பட்ட அதிகாரியினால் விதிக்கப்பட்ட ஏதேனும் மேலதிகத் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகவில்லையென ஒரு வருடாந்தச் சரிபார்த்தற் பிரயோகத்தில் தீர்மானிக்கப்படுமிடத்து, பெயர்குறிக்கப்பட்ட அதிகாரியானவர், குறைவுபாடுகள் அல்லது இசைந்தொழுகாமைகள் நிவர்த்திசெய்யப்படும்வரை இணங்கியொழுகுகைக் கூற்றை இடைநிறுத்தலாம், அல்லது இணங்கியொழுகுகைக் கூற்றை மீளப்பெறலாம்.

*(4)* ஒரு துறைமுக வசதியின் இணங்கியொழுகுகைக் கூற்று, ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பிற்சேர்க்கையில் தரப்பட்டுள்ள படிவத்தில் ஆங்கிலத்தில் தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் இணங்கியொழுகுகைக் கூற்றின் மூலப்பிரதி துறைமுக வசதியில் கிடைக்கக்கூடியதாக வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

## பாகம் IV
## பொது ஏற்பாடுகள்

**34.** சமவாயத்தின் அத்தியாயம் XI-1 இலுள்ள அடிக்குறிப்புகளும் அத்தகைய அடிக்குறிப்புகளினால் குறிப்பீடுசெய்யப்பட்ட தீர்மானங்களும், சுற்றறிக்கைகளும் அல்லது ஆவணங்களும் இவ்வொழுங்குவிதிகளின் ஒருபாகமாகக் கருதப்படுதல் வேண்டும்.

**35.** பணிப்பாளர் தலைமையதிபதி, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவைப்படக்கூடியவாறாகச் சமவாயத்தின் அல்லது 1988 ஆம் ஆண்டின் வரைவாவணத்தின் ஏற்பாடுகளினது குறைந்தபட்சத் தொழினுட்ப நியமங்களுக்கு இணங்கியொழுகுவதற்கான அத்தகைய நடைமுறைப்படுத்துகின்ற நியமங்களை வழங்கலாம்.

**36.** இவ்வொழுங்குவிதிகளில் -

"மொத்தமாக ஏற்றிச்செல்லும் கப்பல்" என்பது, சமவாயத்தின் அத்தியாயம் IX இன் 1.6 ஆம் ஒழுங்குவிதியில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு மொத்தமாக ஏற்றிச்செல்லும் ஒரு கப்பல் என்று பொருளாகும்;

"இரசாயனத் தாங்கிக்கப்பல்" என்பது, சமவாயத்தின் அத்தியாயம் VII இன் 8.2 ஆம் ஒழுங்குவிதியில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு ஓர் இரசாயனத் தாங்கிக்கப்பல் என்று பொருளாகும்;

"வாயு ஏற்றிச்செல்லும் கப்பல்" என்பது, சமவாயத்தின் அத்தியாயம் VII இன் 11.2 ஆம் ஒழுங்குவிதியில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு வாயு ஏற்றிச்செல்லும் ஒரு கப்பல் என்று பொருளாகும்;

"அதிவேகக் கலன்கள்" என்பது, சமவாயத்தின் அத்தியாயம் X இன் 1.2 ஆம் ஒழுங்குவிதியில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறான ஒரு கப்பல் என்று பொருளாகும்;

"நடமாடும் கரைகடந்த துளைத்தல் அலகு" என்பது, ஓர் அமைவிடத்திலல்லாது, சமவாயத்தின் அத்தியாயம் IX இன் 1 ஆம் ஒழுங்குவிதியில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு, பொறிமுறையாக உந்தப்பட்ட நடமாடும் கரைகடந்த துளைத்தல் அல்லது என்று பொருளாகும்;

"எண்ணெய்த் தாங்கிக்கப்பல்" என்பது, சமவாயத்தின் அத்தியாயம் II-I இன் 2.22 ஆம் ஒழுங்குவிதியில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறான ஓர் எண்ணெய்த் தாங்கிக்கப்பல் என்று பொருளாகும்;

"கம்பனி" என்பது, கப்பற்சொந்தக்காரர் அல்லது வேறேதேனும் ஒழுங்கமைப்பு அல்லது கப்பற்சொந்தக்காரரிடமிருந்து கப்பலின் தொழிற்பாட்டுக்கான பொறுப்பை ஏற்றுள்ளவரும், அத்தகைய பொறுப்பை ஏற்றதன்மீது சர்வதேசக் காப்பு முகாமைச் சட்டக்கோவையினால் விதிக்கப்பட்ட எல்லாக் கடமைகளையும் பொறுப்புக்களையும் கையேற்பதற்கு உடன்பட்டுக்கொண்டுள்ளவருமான முகாமையாளர் அல்லது வெற்றுப்படகு வாடகைக்கமர்த்துநர் போன்ற ஆள் என்று பொருளாகும்;

"கப்பல் அல்லது துறைமுக இடைமுகம்" என்பது, கப்பலுக்கு அல்லது கப்பலிலிருந்து ஆட்களை, பண்டங்களை நகர்த்துவதனை அல்லது துறைமுகச் சேவைகளை வழங்குவதனை உட்படுத்துகின்ற நடவடிக்கைகளினால் கப்பலொன்று நேரடியாகவும் உடனடியாகவும் பாதிக்கப்படும்போது இடம்பெறுகின்ற இடைச்செயலாற்றுகைகள் என்று பொருளாகும்;

"துறைமுக வசதி" என்பது, கப்பல் துறைமுக இடைமுகம் இடம்பெறுவதும் இலங்கை அரசாங்கத்தினால் பெயர்குறிக்கப்பட்ட அதிகாரியினால் தீர்மானிக்கப்பட்டவாறானதுமான ஓர் அமைவிடம் ஆகும். இது, நங்கூரமிடும் இடப்பரப்புகள், காத்திருக்கும் கலக்கிடைகள் மற்றும் கடல்நோக்கியபக்கத்திலிருந்தான அணுகுவழிகள் போன்ற இடப்பரப்புகளை உள்ளடக்கும்;

"துறைமுக வசதிப் பாதுகாப்பு அலுவலர்" என்பது, துறைமுக வசதிப் பாதுகாப்பு அமைப்புத் திட்டத்தின் அபிவிருத்தி, நடைமுறைப்படுத்துகை, மீளாய்வு மற்றும் பேணுகைக்கும் கப்பற் பாதுகாப்பு அலுவலர்களுடனும் கம்பனிப் பாதுகாப்பு அலுவலர்களுடனுமான இணைப்புக்கும் பொறுப்பாகவுள்ளவரெனப் பெயர்குறிக்கப்பட்ட ஆள் என்று பொருளாகும்;

"ஒரு கப்பலிலிருந்து மற்றொரு கப்பலுக்கான செயற்பாடு" என்பது, ஒரு கப்பலிலிருந்து மற்றொரு கப்பலுக்குப் பண்டங்களை அல்லது ஆட்களை இடமாற்றுவதனை உட்படுத்துகின்றதும் ஒரு துறைமுக வசதியுடன் தொடர்புபடாததுமான ஏதேனும் செயற்பாடு என்று பொருளாகும்;

"பெயர்குறிக்கப்பட்ட அதிகாரி" என்பது, துறைமுக வசதியின் நோக்கில், துறைமுக வசதிப் பாதுகாப்பு மற்றும் கப்பல் துறைமுக இடைமுகம் தொடர்பில் இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ளாரென, இலங்கை அரசாங்கத்தினுள் அடையாளங்காணப்பட்ட ஆள் என்று பொருளாகும்;

"சர்வதேசக் கப்பல் மற்றும் துறைமுக வசதிப் பாதுகாப்பு (ஐஎஸ்பீஎஸ்) சட்டக்கோவை" என்பது, ஒழுங்கமைப்பினால் திருத்தப்படக்கூடியவாறாக 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேச சமவாயத்துக்கான ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கங்களின் மாநாட்டினது 2 ஆம் தீர்மானத்தினால் 2002 ஆம் ஆண்டு திசெம்பர் 12 ஆந் தேதியன்று ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு, பாகம் அ வையும் (அவற்றின் ஏற்பாடுகள் கட்டாயமானவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்) பாகம் ஆ வையும் (அவற்றின் ஏற்பாடுகள் விதப்புரைசார்ந்தவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்) கொண்டுள்ள கப்பல்களினதும் துறைமுக வசதிகளினதும் பாதுகாப்புக்கான சர்வதேசச் சட்டக்கோவை என்று பொருளாகும்;

"பாதுகாப்புச் சம்பவம்" என்பது, ஒரு நடமாடும் கரைகடந்த துளைத்தல் அலகு மற்றும் அதிவேகக் கலனுட்பட, ஒரு கப்பலின், அல்லது ஒரு துறைமுக வசதியின் அல்லது ஏதேனும் கப்பல் துறைமுக இடைமுகத்தின் அல்லது ஏதேனும் கப்பலிலிருந்து மற்றொரு கப்பலுக்கான செயற்பாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ள ஏதேனும் சந்தேகத்துக்கிடமான செயல் அல்லது சூழ்நிலை என்று பொருளாகும்;

"பாதுகாப்பு மட்டம்" என்பது, பாதுகாப்புச் சம்பவமொன்று எத்தனிக்கப்படும் அல்லது இடம்பெறும் என்ற அபாய அளவின் தகைமை என்று பொருளாகும்;

"பாதுகாப்புப்பற்றிய வெளிப்படுத்துகை" என்பது, ஒவ்வொன்றும் நடைமுறைப்படுத்தும் பாதுகாப்பு வழிமுறைகளைக் குறித்துரைத்து, ஒரு கப்பலுக்கும் ஒன்றில் அது இடைமுகம் செய்கின்ற ஒரு துறைமுக வசதிக்கும் அல்லது மற்றொரு கப்பலுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கை என்று பொருளாகும்;

"ஏற்றங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு ஒழுங்கமைப்பு" என்பது, இவ்வத்தியாயத்தினால் அல்லது ஐஎஸ்பீஎஸ் சட்டக்கோவையின் பாகம் அ வினால் தேவைப்படுத்தப்பட்ட ஒரு மதிப்பீட்டை, அல்லது ஒரு சரிபார்த்தலை அல்லது ஓர் அங்கீகாரத்தை அல்லது சான்றுப்படுத்துகைச் செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டதும் பாதுகாப்புக் கருமங்களில் தோதான நிபுணத்துவத்தையும் கப்பல் மற்றும் துறைமுகத் தொழிற்பாடுகள் பற்றித் தோதான அறிவையும் கொண்டதுமான ஓர் ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;

"ஒழுங்கமைப்பு" என்பது, சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்.

EOG *02-0240*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.